# படி PAHDI

படித்தேன் ! படித்தேன் !! படித்தேன் சுரந்தது.

படித்தல் 1

படிதல் 3




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
உலக ஆசிரியர் தின வெளியீடு

**WORLD TEACHER'S DAY**
**JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION PUBLICATION**
**2002**

# படி PAHDI

படித்தேன்! படித்தேன்!! படித்தேன் சுரந்தது.

படித்தல் 1 படிதல் 3

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்

## உலக ஆசிரியர் தின வெளியீடு

## WORLD TEACHER'S DAY

JAFFNA NATIONAL COLLEGE OF
EDUCATION PUBLICATION

2002

## படி ஏறி உயர்வதற்கான துலங்கல்
## தீபத்தினால் தீபமேற்றுதல்

நிர்மலமான உள்ளத்தோடு குற்றம் களைந்து அறிவெளிவூட்டும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் பூசிக்கப்பட வேண்டியவர்கள். ஒரு சமூகத்தின் அறிவுக் கண்களை அகலத்திறக்கவும், தேசத்தைக் கட்டி யெழுப்பவுமான வல்லமை பெற்றவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் தம் கடமை உணர்ந்து பணியாற்றும் போது ஆசிரியம் புனிதமடைகின்றது.

இன்றைய சமூகம் ஆசிரியர்களிடமிருந்து உயரிய பல சேவை களையும், கடமைகளையும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களை உருவாக்கும், வார்த்தெடுக்கும் பணியில் தேசிய கல்வியியற் கல்லூரிகள் செயற்படுகின்றன. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பல்வேறு சவால்களை வெற்றி கொண்டு தடைகளைத் தகர்த்தெறிந்து நல்லாசிரியர்களை உருவாக்கிவருவதுடன்; அவர்களினூடாக எமது பிரதேச பாடசாலைகளில் பல்வேறு புத்தாக்கச் செயற்திட்டங்களையும் செயற்பாட்டு ஆய்வுகளையும் மேற்கொண்டு கல்விப்புரச்சிக்கான வித்துக்களை விதைத்து வருகின்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரித்தாய் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் மூலம் ஆசிரிய மாணவர்களும், பிரதேச ஆசிரியர்களும் சிறப்பாகத் தம் ஆசிரியப்பணிகளை மேற்கொள்ள வழிகாட்டி உதவி புரிவதினூடாக ஆசிரிய தீபங்களை ஒளியேற்றுகிறாள். அதனூடாக எம் மண்ணின் மைந்தரர்களான மாணவ மாணவியருக்கு அறிவொளி வூட்டி தேசத்தைக் கட்டியெழுப்பும் சேவையை ஆற்றுகின்றாள். இது ஒரு தீபத்தினால் பற்பலதீபங்களை ஒ ியேற்றும் நற் கைங்கரியமாகும். இவ்வகையிலேயே ''படியின்'' மூன்றாவது இதழும் உங்கள் கரங்களில் தீபமெனப் பிரகாசித்து அறிவுத் தீபத்தை ஏற்றுகின்றது.

இதன் மூலம் ஆசிரியர்களின் தொழில் வாண்மை இலட்சணங்கள் பிரகாசிக்க வேண்டும். ஆசிரியத்தொழில் விசேடத்துவப்பண்பு, தொடர் நிலைக்கல்வி, ஆய்வுகளில் ஈடுபடல், வெளியீடுகள் செய்தல், தொழில் மதிப்பீடு, தொழில் திருப்தி என்பவற்றினூடாக ஆசிரியம் நிலைக்க இன்றைய ஆசிரியதின நன்நாளில் உறுதிஎடுத்துக் கொள்வோமாக.

''சொற்களை விடச் செயல்கள் உரத்த குரலில் பேசும்''

**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
(இதழாசிரியர்)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி

## கலாநிதி.திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின்

# பகிர்வு

- உலகின் சகல பாகங்களிலிலுமுள்ள ஆசிரியர் கல்விப்பயிற்றுநர்களும், கல்வித்திட்டமிடுவோரும் கல்வியின் சகல முனைகளிலும் புத்தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றார்கள்.
- புதிய அறிவு தொடர்ச்சியாக வரும் ஒன்றாகையால் முன்பு பெற்ற அறிவின் கூறுகள் நிலையானவை என இருக்க முடியாது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும் தொடர்ச்சியாக மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
- தற்போதைய கல்விச்சூழ்நிலைகளின் பிரச்சனைகளை இனம் காணவும், உண்மைகளைக் கண்டுபிடிக்கவும், ஆய்வுகளைச் செய்யவும் செயல்முறை சார்ந்த அறிவுத்திறன்கள் தேவையாகவுள்ளன.
- இதனூடாக கற்பவர் மையக்கற்றல்; கற்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் பல்வேறு ஆக்கச்செயற்பாடுகளுக்கு வழி காட்டுவதாகவும் அமையும்.
- ஆசிரியர்கள் இவ்வாறாகச் செயற்பட முதலில் அவர்கள் வாண்மையுள்ளவராக இருக்க வேண்டும். புத்தாக்கங்களை தேடி அறிபவராகவும் அவற்றை உருவாக்குபவராகவும் இருக்கவேண்டும்.
- இதற்குப் "படி" மூன்றாவது இதழ் வழிகாட்டி உரமூட்டுவதாக அமைகின்றது. தீபத்தினால் தீபமேற்றுதல் என்றகல்வியின் ஞானச்செயல் முறைக்கு வழிகாட்டுகின்றது.
- இவ்வழிகாட்டல்; கல்வி ஓர்உரிமை மட்டுமன்றி மேம்பாடுகள் அனைத்திற்கும் அடிப்படை. இக்கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் பூசிக்கப்பட வேண்டியவர்கள். இதேவேளை ஆசிரியர்களும் தம் கடமைகளை உணர்ந்து எதிர்கால நற் சந்ததிகளை உருவாக்க அர்ப்பணிப்பான கல்விச் சேவையாற்ற முன்வர வேண்டும்.

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
**பீடாதிபதி**
**06.10.2002**

## மலரின் உள்ளே


1. இலங்கையில் ஆசிரிய வாண்மை
பேராசிரியர்.சபா.ஜெயராசா
2. ஆசிரியர் கல்விமையங்களினூடாக இடையறாத
ஆசிரியர் கல்வி-கலாநிதி ஐ .எல்.கினிகே
3. கல்வியின் புதிய குறிக்கோள்களில் ஒன்று
கற்பதற்குக்கற்றல்-பேராசிரியர். சோ. சந்திரசேகரன்.
4. IMPORTANCE OF LIBRARY AND INFORMATION SCIENCE- Mrs.R.PARARAJASINGAM.
5. நல்லாசிரியரும் உளநல மேம்பாடும்
திரு.கு.சண்முகநாதன்
6.நல்லாசிரியர் இதய ஒலியும் -நன்மாணாக்கர் கூற்றும்.
7. மனத்தகைப்பு, (Stress)
திரு.S.செந்தில்மணி
8.ஆசிரிய சேவையின் பெருமையைப் பிரகாசிக்கச் செய்யும் கற்றல் கலாச்சாலத்தை நோக்கி
-மகிந்தரணவீர
9.தேசிய கல்வியியற் கல்லூரிகளின் முன்-சேவை ஆசிரிய பயில்வின் இலக்குகள்உK.தர்மன்


### அட்டைப்படம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2002ம் ஆண்டு யூலைமாதம் கல்வியியல் கண்காட்சி நடைபெற்றது. அதில் கல்லூரியின் ஆரம்பக்கல்வித்துறை 2ம் வருட ஆசிரியமாணவர் திரு.ப.சிவகரன் அவர்களால் ஆரம்ப கணித பாடத்தில் "தெரிதலும் அடங்கலும்" என்ற பகுதியைக் கற்பிப்பதற்கான புதிய கற்பித்தல் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டு; பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு முறை மூலம் அவர் பாடத்தைக் கற்பிக்கின்றார்.

**விலை: 120ரூபா**

# இலங்கையில் ஆசிரியவாண்மை

# Teaching Profession in Sri Lanka

பேராசிரியர்

**சபாரத்தினம் ஜெயராசா**

**கல்விப்பீடம்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

ஆசிரியர்களைத் தமிழர் மரபில் குறிக்கும் பல்வேறு எண்ணக்கருக்கள் வளக்கில் இருந்தன. சான்றோர், புலவர், முனிவர், நல்லாயர், நல்லாசிரியர், கணக்காயர், உறுபொருள் வாதிகள், அறவாணர், ஆன்றோர், நாயனார், மாதவத்தார், யோகிகள், ஞானிகள், வாணர், சித்தமழகியார், மாப்பாணர், முருகர், வாரியார், நாவலர், கலைஞானிகள் என்றவாறு பழந்தமிழ் மரபில் ஆசிரியத்துவ எண்ணக்கரு விளக்கப்படலாயிற்று.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சட்டத்துறை செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் ஈடுபட்டிருந்தமையால் சட்டம்பியார் என்ற எண்ணக்கருவும் வழக்கிலிருந்தது. தமிழ் மரபில் ஆசிரியர்கள் ஏடுகளைப் பாதுகாத்து வைத்திருந்தமையால் ஏட்டுடையார் என்ற பெயரும் யாழ்ப்பாணத்தில் நிலைத்திருந்தது (யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி. 2000 ப.6) சமூகத்தின் அறிவுக்கண்களாக ஆசிரியர் விளங்கியமையால் ''கண்ணாட்டியர்'' எனவும் அழைக்கப்பட்டனர். அறிவிலும் அனுபவங்களிலும் ஆசிரியர்கள் மேலோங்கி முதிர்ந்திருந்தமையால் 'மூப்பர்' எனவும் குறித்து உரைக்கப்படும் மரபு காணப்பட்டது. அறிவை வாரி வழங்கியமையால் 'வாரியார்' எனவும் அவர்கள் அழைக்கப்பட்டனர். தற்கால கல்வி மரபிலும் அறிவுப்பரப்புகையில் (DISSEMINATION OF KNOWLEDGE) ஆசிரியரின் பங்கு விதந்து குறிப்பிடப்படுகிறது.

பால் நிலை நோக்கில் பெண் ஆசிரியத்துவ மரபும் தமிழர்கள் வாழ்வில் ஆழ்ந்து வேரூன்றியிருந்தது. ஔவை என்ற எண்ணக்கரு பொதுவாக பெண் ஆசிரியர்களைக் குறித்து நிற்கிறது. பாடினியார், உறுவையர், நாச்சியார், ஞானியர், நூலாச்சியர் என்றவாறு பெண் ஆசிரியர்களைக் குறிக்கும் எண்ணக் கருக்கள் வழக்கில் இருந்தன.

தமிழர்களுடைய மரபில் கல்வியின் நோக்கங்களும், ஆசிரியமும் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டன. (யாழ்ப்பாணத்து மரபுவழி கல்வி, 2000 .ப.57)

1. உடல் உள நடத்தைகளைச் செம்மைப்படுத்தல்.
2. சுடச் சுடரும் பொன்போல் அறிவுக்கு மெருகூட்டல்.
3. அறியாமையைக் கழுவி இருளிலிருந்து ஒளிக்கு நகர்த்துதல்.
4. அவலங்களிலிருந்து விடுபட வைத்தல்.
5. உளச்சுகமும் உடற்சுகமும் காணுதல்.
6. உண்மையை உணர வைத்து மெய்ப் பொருள் தேடுதல்.
7. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று நிலைகளிலும் தூய்மையை உருவாக்குதல்.
8. ஐம்புலன்களையும் நெறிப்படுத்துதல்.
9. அழுக்காறு, அவா, வெகுளி முதலாம் எதிர்மறைப் பண்புகளிலிருந்து விடுபட வைத்தல்.
10. நலிந்தார்க்கும் மெலிந்தார்க்கும் உதவுதல்.
11. அறிவைப்பரப்பி பல்லுயிர் ஓம்புதல்.
12. அறவழி நிற்றல்.
13. இசைவாக்கம் பெறுதல்.
14. உட்கிளர் (Intution) பண்புகளை வளர்த்தல்.
15. மீயாற்றல் ஆற்றுகைகளை (Mastery peroformances) வளர்த்தல்.
16. வல்லமை பெறுதல்.
17. அறிவின் முன்னரங்கினை முன்னோக்கி நகர்த்துதல்.

ஆசிரியத்துவம் பற்றிய உலகளாவிய வரைவிலக்கணத்தினைஅடுத்து நோக்கலாம்.

1. ஆசிரியத்துவம் தெறிசிந்தனையை (Reflective Thinking) அடிப்படையாகக் கொண்டது.

2. ஆக்கச் சிந்தனையை (Creative Thinking) தொடர்ந்து பேணி வளர்ப்பது.

3பகுத்தறிவு பூர்வமான முடிவுகளை (Rational Conclusions) நோக்கி நகர வைப்பது.

4சகிப்புத் தன்மையை (Tolerence) தொடர்ந்து கடைப்பிடிப்பது.

5மாணவர் கற்றலுக்கான எடுக்கும் தாமதித்த நேரங்கள் பற்றி கவலை கொள்வது. (Worry about the amount of time involver in Learning)

அதாவது ஓர் ஆசிரியருக்கு எப்போதுகவலை ஏற்படுகின்றது என்றால் ஒரு மாணவர் கற்பிப்பதை விளங்கிக் கொள்வதில் நேரம் தாமதமாகி நீடிக்கும் பொழுதுதான்.

## கல்விக் கருத்தியலும் ஆசிரியமும்

மேலையுலகில் வளர்ச்சியுற்ற ஒவ்வொரு கருத்தியலும் தத்தமது தளங்களில் நின்று ஆசிரியத்துவத்ததை நோக்கி இலட்சிய வாதக் கருத்தில் (Idealiotic Ideololgy) ஆசிரியத்துவத்துக்கும் கற்பித்தலியலுக்கும் பின்வருமாறு விளக்கம் தருகின்றது.

It involbes comunication which very much depends upon rapport between the teaeher and the taught. This is poss ible only when the teacher considers the thught as a part of his self and thus becomes selfless in his profession. The Ideal character building cannot be achieved unless the teacher himself presents the model of ideal teacher.

ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நிகழும் தெளிந்த உறவாடலே ஆசிரியத்துவத்துக்குரிய வளமாகும். தன்னுள் அமைந்த ஓர் உறவாக ஆசிரியர் மாணவரைக் கருதும் பொழுது ஆசிரியர் தனது தன்னலத்தை இழக்கிறார். ஓர் இலட்சிய காட்டுருவாக ஆசிரியர் இருக்கும் பொழுது அதர்ஸமான நல்லொழுக்க கட்டுமானம் மாணவரிடத்து ஏற்படமுடியும்.

இயற்பண்பு வாதக் கருத்தியல் (Naturalism) ஆசிரியத்துவம் தொடர்பான அணுகுமுறையை பின்வருமாறு விளக்குகின்றது. "Man is not happy who has long life but happy is one who has gained experiences of life" (Roussean, Emile)

நீண்ட ஆயுள் ஒருவருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை மாறாக வாழ்விலிருந்து அனுபவங்களைப் பெறுதலே உண்மையான மகிழ்சியைக் கொடுக்கின்றது. வாழ்க்கை அனுபவங்கள் வாயிலாக கல்வியை முன்னெடுத்தல் இயற்பண்பு நெறியில் முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

யதார்த்த வாதம் அல்லது நடத்தியல் (Realism) ஆசிரியத்துவத்தை நோக்குதல் பின்வருமாறு சாராம்சமாக தரப்படுகின்றது.

"Realism holds that in the process of knowledge, things are Independent of the existence and influenced by the knower"

நடப்பியல் ஆசிரியத்துவ விளக்கமானது அறிவிற் செயல் முறையின்போது பொருள்கள் அவற்றின் இருப்பில் சுயாதீனமாகவுள்ளன என்பதை வலியுறுத்துகின்றது. மாணவரின் அகவயப்பாங்கினால் அவை செல்வாக்குப் பெறுகின்றன.

அதாவது பொருள்களின் இருப்பு சுயமாக உள்ளது. கற்பவனால் அந்தச் சுயாதீன இருப்பின் மீது செல்வாக்கு செலுத்தப்படுகின்றது என நடப்பியல் விளக்குகின்றது. இருப்பியம் (Exislentalisn) ஆசிரியத்துவத்தை வேறொரு கண்ணோட்டத்தில் நோக்குகின்றது.

"The teacher should have an experience of self realisation so that he may be capable of guiding the students in this process"

ஆசிரியர் தன்னை உணர்பவராக இருக்கும் பொழுதுதான் மாணவரின் ஆக்கச்செயன் முறையில் அவர்களால் வழிப்படுத்தும் தொழிற்பாடுகளைச் செவ்வனே மேற்கொள்ள முடியும் என இருப்பியம் கருதுகிறது.

மானிடப் பண்புக் கோட்பாட்டினர்மாணவரின் யதார்த்தமான சுயத்துக்கும் (Real self) இலட்சிய வடிவிலான சுயத்துக்கும் (Ideal self) மிடையே முரண்பாடு ஏற்படாது ஆசிரியர்கள் பார்த்துக் கொள்ளவேண்டுமென விளக்குவர்.

அளவைசார் புலனறிவாக ஆசிரியத்துவ நோக்கு (Logical Positivism) பின்வருமாறு அமைகிறது.

"Pedagogy is to distinguiash between senseand non sense, knowlede and igno rance, meani- ngful and meaning-less propo- sitions"

ஆசிரியத்துவம் நல்லவற் றையும் அல் லனவற் றையும் வேறு படுத் தும் பண் புடையதாக, அறிவையும் அறியாமையையும் பிரித்தறிவதாக, மொழிசார்ந்த கருத்தையும் கருத்துப் பிறள் வையும் வேறுபடுத்தி அறிவதாக இருத் தல் வேண் டும். என வலியுறுத்துகின்றது.

பயன்கொள் கோட்பாடு (PRAG MATISM) கல் வி யையும் ஆசிரியத்துவத்தையும் பின்வருமாறு அணுகி நிற்கிறது.

"Education is the formation of right mental attitudes in respect to the difficulties of contemporary social life" (Dewey, J.Democracy and Education. P.386)

சமகால சமூக வாழ்வில் இடர்களை அடிப்படையாகக் கொண்ட சரியான உள ஆற்றல் களையும் அறவொழுக்க மனோ பாவங்களையும் உருவாக்கு தலே கல்வியாகும் என்பதை ஆசிரியர் முன்னெடுக்க வேண்டு மென பயன் கொள் வாதிகள் வலியு றுத்துவர்.

மானிடப் பண்பு அணுகு முறையானது ஆசிரியத்துவ நோக்கினை கல்வியுடன் தொடர்பு படுத்தி பின்வருமாறு விளக்கு கின்றது.

"According to humanism, education aims at man making. It aims at complete development of human personality. It enables man to solve individual and social problems. Its purpose is to increase efficiency and happiness of human beings. It supports democratic philisophy of education since the values of liberty equality and fraternity are fundamental human values"

முழுநிறைவான ஆளுமை வளர்ச்சி தனிமனித மற்றும் சமூகப்பிரச்சனைகளைத் தீர்க்கும் ஆற்றல், மனிதவிளைத் திறன் மேம்பாடு, மக்களாட்சி மரபுகளுக்கு ஆதரவு தருதல், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலியவற்றை அடிப் படை விழுமியங்களாகக் கொள்ளல் முதலியவற்றை வலியுறுத்தும் மானிடப்பண்பு அணுகுமுறைகள் இலங்கையின் முற்போக்கு ஆசிரியர் களால் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் ஆசிரியர் கல்வி தொடர்பான கொள்கை ஆக்கத்தில் எமது பண்பாட்டுப் பின்புலத்தின் முன்னோடியாக விளங்கியவர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்-ஆசிரியர் நல்லொழுக்க முள்ளவராயும் நூலறிவு நிரம்பியவர்களாயும் மாணவர்களது உள்ளத்திலே நல்லறிவை பசுமரத்தாணி போன்று பதிய வைப்பவர்களாயும் இருத்தல் வேண்டும். என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கருத்து.

(நாவலர் பிரபந்தத் திரட்டு)

ஆசிரியர் என்றும் மாணவர் களாக இருந்து தொடர்ந்து கற்றுக் கொண்டிருத்தல் வேண்டு மென்றும் மாணவர்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரியாக அவர்கள் விளங்க வேண்டுமென சேர் பொன் இராமநாதன் அவர்கள் கூறினார்.

இவ்விருவரதும் கருத்துக் களும் பின்னர் நிலை பேறு கொண்ட சைவவித்தியா விருத்திச் சங்க (Hindu Board of Ed.) ஆசிரியத்துவ மரபுகளிலும் இந்துக்கல்லூரி மரபுகளிலும் ஆழ வேரூன்றி இருந்தன. பின்னர் வளர்ச்சி பெற்ற காந்திய கல்விச் சிந்தனைகள் இந்நாட்டில் ஆசிரியத்துவ ஆக்கத்தில் ஆழ்ந்த சுவடுகளைப் பதித்தன.

மேலை நாடுகளில் வளர்ச்சி பெற்றமானிடவாதச் சிந்தனைகளும் இந்திய மரபிலே முகிழ்ந்த காந்தியச் சிந்தனைகளும் இந்நாட்டின் கல்விமான்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் செல்வாக் குகளை ஏற்படுத்தின. கல்வி வாயிலான விடுதலை சமூக அசைவியம் (Social Mobility) கல்வியைக்கருவியாகக் கொண்டு வாழ்க்கைத் தரத்தை உயர்த் துதல்,பண்பாடுகளையும் விழுமி யங்களையும் கையளிப்பதற்குக் கல்வியைக் கையாழுதல் முதலி யவை இந்நாட்டின் ஆய்வறிவாளர் மத்தியிலே விரவிநின்ற கல்விக் கருத்துக்களாகும். இக்கருத் துக்கள் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் (Youth Congress) முன்வைத்த முன் மொழிவு களிலும் துலங்குகின்றன.

செயல் வீச்சு மிக்க ஓர் ஆசிரியர் (Promising Teacher) எவ்வாறு காணப்படுவார் என்பது பற்றிய கட்டளைகளை கல்விய லாளர் அவ்வப்போது விளக்கி யுள்ளனர். ஒரு சிறந்த ஆசிரியரின் கற்றல் மட்டங்கள் தொடர்ந்து அதிகரித்து செல்லும். கற்பித்தல் வினைத் திறன் காரணமாக மாணவர் பங்கு பற்றும் அளவும் அதிகரித்த வண்ணம் இருக்கும்

கற்கும் மாணவரின் இடை விலகலும், சித்தியின்மை விழுக்காடும் மிகஅபூர்வமாகவே இருக்கும். மாணவரின் சுயவெளிப் பாடுகள் மிகவிரிவான முறை யிலே தூண்டப்பெறும். ஆசிரியர் வராத வேளையிலும் குறித்த ஆசிரியரின் படிமத்தில் வீச்சில் சுயமான கற்றல் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

## ஆசிரியத்துவ உருவாக்கம்

வரலாற்று நோக்கில் வயது மூப்பு, அனுபவ மூப்பு என்பவற் றிலிருந்தே ஆசிரியத்துவம் உருவானது. ஆண்டான் அடிமை முறை சமூகத்தில் ஆசிரியத் துவம் வலுப்பிரயோ கத்துடனும் அதிகாரப் பிரயோகத்துடனும் இணைந்து கொண்டது. ஒடுக்கு வோர், ஒடுக்கப்படுவோர் என்ற சமூக இரு நிலைத்துருவமாக்கம் நிகழ ஒடுக்கு முறைக்குச் சாதகமான ஆசிரியத்துவம் ஒரு புறமும், ஒடுக்கப்படுவோர் மீட்ச் சிக்குரிய ஆசிரியத்துவமும் எதிற் புற மூகமாக வளரலாயின. இவ்வா றான இருநிலைமரபு இன்றுவரை உலகில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

## ஒடுக்குமுறையை(Oppression) நியாயப்படுத்தும் ஆசிரியத்துவம் பின்வருமாறு அமையும்

1. மாணவரைத் தெறி சிந்தனையற்ற வெறும் நுகர்வோராக மாற்றுதல்.
2. மாணவர்களின் சுயாதீன சிந்தனைகளை முறியடித்தல்.
3. அச்சில் வார்த்து எடுத்தல் போன்ற ஒரே விதமான சிந்தனையை மாணவரிடத்து வளர்த்தெடுத்தல்.
4. ஆசிரியரும் மாணவரும் இணைந்து கற்போராய் (Co-Learners) இருக்கும் நிலையை மறுத்தல்.
5. கற்பித்தல் செயல்பாட்டில் அகப்பொருளாக ஆசிரி யரை அமைத்து எல்லை நிலையில் மாணவரை வைத்தல்.
6. யதார்த்த உலகு பற்றிய உருத்திரிந்த காட்சிகளை மாணவருக்கு வழங்குதல்.
7. நட்பியல் முரண்பாடுகள் மாணவருக்கு உணர்த்தப் படாது, போட்டி உணர்வுகளுக்குள் மாணவரைத்- தங்கவைத்து விடுதல்.
8. அடாத்துக்களை மாற்றியமைக் கும் அறிகையும் வல்லமையும் மாணவரிடத்து உருவாக்கப்-

படாதிருத்தல்.

9.கல்வியையும் வாழ்க்கை யையும் ஆக்க மலர்ச்சிச் செயற் பாடாகக் கருதாது பொறிமு றைச் செயற்பாடாக உணரும் நிலையை வளர்த்தல்.

10பிரச்சனைகளுக்கு முகம் கொடு க்காது அந்நியமாகவும் உளக் கோலங்களை உருவாக்குதல்.

11உசாவல் விருப்பை (Curiosity) வளர்க்காது உரைத்தவற்றை மீள ஒப்புவிக்கும் நிலையை வளர்த்தல்.

12.பொதுமக்கள் மொழியை (MassLanguage) அடுக்-கமைப்பில் தாழ்ந்ததாக்குதல்.

13. அறஒழுக்கங்களையும் கல்வி யையும் வேறுபடுத்திப்பார்த்தல்.

14.நிலை மாற்றத்தை (Transformation) முதன்மைப்படுத்தாது நியமிக்கப்பட்டகட்டமைப் புக்குள் ஒடுங்கச்செய்தல்.

15.தன்முனைப்புக் கற்றலின் (Self initiated Learning) நம்பிக்கை அளவைக் குறைத்துவிடுதல்.

இலங்கையைச் சிறப்பாகக் கொண்டு நோக்கும் பொழுது ஆசிரியம் தமது செயலாற்றுகையிலிருந்து நலிவுபெறுவதற்கான நிகழ்சிகளும் வலுவூட்டுவதற்கான செயற்பாடுகளும் சுதந்திரகாலத்திலிருந்து சமாந்தரமாக நிகழ்ந்து வந்துள்ளன. அதாவது: ஒருபுறம் வலுவூட்டும் செயற்பாடுகளும் மறுபுறம் நலிவூட்டும் செயற்பாடுகளும் ஏககாலத்தில் நிகழ்ந்து வந்துள்ளன.

## நலிவூடும் செயற்பாடுகள் வருமாறு

1. சுதந்திர காலத்திலிருந்து விரிவும்பலமும் பெற்று வந்த கல்வி நிர்வாகக் கட்டமைப்பு ஆசிரியத்துவத்தின் மீதான மேலாதிக்கப் பழுவை படிப்படியாக அதிகரிக்கச் செய்து வந்துள்ளது.

2நிர்வாகிகளாகப் புடை பெயரும் இலட்சியங்கள் ஆசிரியர்களிடத்து வலுவூட்டப் பெற்று வந்துள்ளன.

3.ஆசிரிய சேவை கல்வி நிர்வாக சேவையிலும் பார்க்க அந்தஸ்த்து குறைந்தது என்ற மாயை உருவாக்கப்பட்டமை.

4.ஆசிரிய சேவைக்குரிய உளச் சார்பும்(Aptiude) அற்பணிப்பும்

அற்றவர்கள் ஆசிரியத்துவத்துள் நுழைந்தமை வாண்மை நிலையில் தாக்கங்களை ஏற்படுத்துதல்.

5. ஆசிரியத்துவத்தில் ஏற்பட்ட- பன்முகப்படுத்தப்பட்ட பாங்-கும் அதிக வீச்சும் காரண-மாக ஒரு சிலஆசிரியரிடத்து காணப்படும் எதிர் மறைப்-பாங்கு அனைத்து ஆசிரி-யர்கள் மீதும் பொதுமைப்-படுத்தப்பட்டும் விரிவுபடுத்-தப்பட்டும் வருகின்ற நிலை வளர்ச்சி அடைதல்.

6. பிரத்தியேகமான தனியார் கல்வி நிலையங்கள் பாட சாலைகளுக்குச் சமாந்தரமாக இயங்கி வருதல் பாடசாலை ஆசிரியர்களுக்- குரிய பொறுப் பியத் தையும் (Accountability) அதேவேளை வெகுமதியையும் (Reward)குறைத்து வருதல்.

7. பாடசாலைகளில் ஆசிரியர்க-ளுக்குப் பொருத்தமற்ற வேலை ஒதுக்கீடுகளை வழங்குவதால் கீழ்உழைப்பு ஏற்படுதல்.

8. வளங்கள் போதுமானதாக இல்லாத நிலையில் புதிய முன் மொழிவுகளை நடை முறைப்படுத்தும் படி ஆசிரியர் நிர்ப்பந்தப்படுத்தல்.

9. தெறித்தல் சிந்தனை (Reflective Thought) திறனாய்வு அணுகுமுறை(CriticalApproach) கொண்ட ஆசிரியர்கள் தனித்து ஒதுக்கப்படும். (Isolation)

10. ஆசிரியர்களுக்குரிய வேலை அளவுகளில் எண்ணளவான அதிகரிப்பு (Quantative) ஏற்படுவதனால் பண்பளவு முன்னேற்றங்களை(Qualatative) எட்டுதல் கடினமாகவுள்ளமை.

## பள்ளிக்கூட தேசியமயமாக்கலும் ஆசிரியத்துவமும்.

இலங்கையில் பள்ளிக்-கூடங்களையும் ஆசிரியகலா சாலைகளையும் 1960 ஆம் ஆண்டில் அரசாங்கம் பொறுப்-பேற்கவிளைந்த பொழுது அதனை அமரர் எஸ்.ஜே.வி.-செல்வநாயகம் அவர்களும் தமிழரசுக் கட்சி யினரும்நியாயபூர்வமாக எதிர்த் தனர். அதற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அந்த எதிர்ப்பின் தீர்க்க தரிசனத்தைப் புலப்படுத் தின. கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை, நல்லூர் ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலை முதலியவை அரசாங்கத்தினால் தொடர்ந்து மூடப்பட்டன. தென்-னிலங்கையில் இயங்கிய பல

தமிழ்ப்பாடசாலைகள் ''மீள்-xO q F gL j j y ;|| (Reorganization) என்ற கௌரவமான தொடரின் கீழ் மூடப்பட்டன. இன்றும் தென்னிலங்கையில் சில தமிழ்ப்பாடசாலைகள் தமிழ் மொழி தெரியாத அதிபர்களின் கீழ் இயங்கி வருதல் குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழி மூல ஆசிரிய கலாசாலைகள் மூடப்பெற்றமையால் இன்றும் எமதுஆரம்பப் பாடசாலைகளில் எதுவித வாண்மைப்பயிற்சியுமற்ற ஆசிரியர்களே பெருமளவில் கடமை புரிகின்றனர். இதனால் பாடசாலைக்கல்வியின் அடித்தளம் பெருமளவு பாதிப்புக்குள்ளாகிக் காணப்படுகிறது.

1972ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கல்விச்சீர் திருத்த நடவடிக்கைகள் அனைத்து ஆசிரியர்களும் வாண்மைப் பயிற்சி பெற-வேண்டுமென வலியுறுததியமை ஒரு முற்போக்கான நடவடிக்கை யாயினும் நடைமுறையிலே பல குறைபாடுகள் காணப்பட்டன.

1. பணியிலே சேர்ந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஆசிரியர்களுக்கு வாண்மைப் பயிற்சி தருவதால் எதிர்பார்த்த பயன்களைப் பெறமுடியாதிருந்தது.
2. கல்வியின் உள்ளடக்கமாகிய கலைத்திட்டத்தில் பல மாற்றங்களும் புதுமைகளும் ஏற்படுத்தப்பட்ட போதிலும் ஆசிரிய கலாசாலைகள் பழைய பாடத் திட்டங்களின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருத்தல்.
3. ஆசிரியர் பணிக்கு முன்னைய பயிற்சியும் (Pre-service Training) வினையாற்றல் கொண்டதாகவும் தரமுடை யதாகவும் அமையவில்லை.
4ஆசிரியர் பயிற்சியில் பணியாட்சிப் பண்புகளே மேலோங்கி இருத்தல்.

பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் பணிகளை உள்வாங்கி அமைக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் (NIE) தனது மூலாதாரமான கலைத்திட்ட அபிவிருத்தி, பாடங்களின் அபிவிருத்தி, கற்பித்தற் சாதனங்களின் அபிவிருத்தி என்பவற்றுடன் ஆசிரிய வாண்மைக் கல்வியில் ஈடுபட்டமை தளம்பல்களை ஏற்படுத்தியது.

அ) அவர்களால் முன்னெடுக்கப்-பட்ட தொலைக்கல்வி ஆசிரிய-

வாண்மைப் பயிற்சிகள் வினைத் திறனுடனும் வாண்மை ஆழத்துடன் இடம்பெறவில்லை என்ற திறனாய்வு உண்டு.

ஆ)அவர்களால் தமிழ் மொழி மூலமாகத் தயாரித்து வழங்கப்படும் இதவடிவங் களில்(Modules) எண்ணக்-கருபிழைகளும், தமிழ் இலக்கண வழுக்களும் காணப்படுதலை ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இ)தேசிய கல்வி நிறுவகத்தால் இயக்கப்படும் பட்டப்பின் கல்வித்தகமைச் சான்றிதழ் நெறியின்தரம்தொடர்பானபல கேள்விகளை பேராதனை, கொழும்புப் பல்கலைக்-கழகங்களைச் சேர்ந்த கல்வியியல் அறிஞர்கள் எழுப்பியுள்ளார்கள்.

-

## புதிய மாற்றங்கள்

இலங்கையில் ஆசிரிய வாண்மையை ஒழுங்கு- படுத்தும் நோக்குடன் பாராளுமன்றத்தில் ஆசிரிய கல்வி அதிகார சபைச் சட்டம் (National Authority on Teacher Education Act, No. 32 of 1997) இயற்றப்பட்டது.இந்த அதிகார சபையின் நோக்கங்கள் வருமாறு.

1. ஆசிரிய கொள்கையாக்கம், பராமரிப்பு, ஆசிரிய கல்வியை ஒருங்கிணைத்-தல் தொடரும். ஆசிரியகல்வி முதலாம் துறை களில் ஆலோசனை அமைச் சருக்கு வழங்குதல்.
2. ஆசிரிய கல்வி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள-லும், ஆய்வின் வழியாகப் பெறப்பட்ட கருத்துக்களைப் பரப்புதலும், தொடர் நடவ-டிக்கைகளில் ஈடுபடலும்.
3. ஆசிரிய கல்விச் செயல் முறைகளையும் ஆற்று-கைகளையும் முன்னேற்-றங்களையும் மதிப்பீடு செய்தல், மீளாய்வு செய்தல், பின்னூட்டுதல்.
4. இலங்கைக்குப் பொருந்தக் கூடியதான ஆசிரிய நுண்-ணுபாயங்களை உருவாக்-குதலும் வளர்த்தலும்.
5. ஆசிரிய நியமனங்கள் தொடர் பான கொள்கைத் திட்டங்களை உருவாக்குதல்.

தேசிய ஆசிரிய கல்வி அதிகார சபை மேற்கொண்ட முயற்சிகளில் முக்கியமானது ''<u>தேசிய ஆசிரிய கல்விக் கொள்கை</u>" ஒன்றினை வகுத்தமை ஆகும். இதனை வகுப்பதற்கு (UNESCO) வெளியிட்ட (Learn-

ing: the Treasure within - Pari 1996) கற்றல் உள்ளமைந்த களஞ்சியம் என்ற ஆவணம் ஆதாரமாயிற்று. ஆசிரியர் கல்வியில் மீள் கவனத்தைச் செலுத்துதல் அவசியம் என்ற கருத்து அங்கு வலியுறுத்தப்பட்டது. ஆசிரயருக்குரிய புதிய முகக் குறிப்பு (New profile) எவ்வாறிருக்க வேண்டுமென (UNESCO) தெளிவாக விளக்கியது. இதன் அடிப்படையில் விளக்கப்பெற்ற ஆசிரியருககுரிய செயற் பாட்டுத் தொடருக்கான விபரங்கள் வருமாறு.

1. கோள்மயப்படல், தகவல் தொழிநுட்பவியல் முதலிய வற்றால் எற்படும் புதிய திசைப்படுத்தல்கள் ஆசிரிய கல்விக்கு ஏற்படுத்தும் அழுத்தங்களும் பலாபலன்களும் கருத்தில் கொள்ளப்படல்.
2. கல்வியியல் புத்தாக்குனர்களாக (Innovators) ஆசிரியர் விளங்குதலை உணர்தல்.
3. சமூகநிலை மாற்றத்தில் ஆசிரியர்கள் விசைப்படும் முகவர்களாக (Change Agents) தொழிற்படலை அறிதல்.
4. ஆசிரிய தெரிவு ஆட்சேர்ப்பு என்பவை தொடர்பாக புதிய கொள்கைகளையும் அளவியங்களையும் (Criteria) வகுத்தல்.
5. கல்வித் தொகுதியில் உள்ளமைந்த ஆசிரியர் க டமைக் கூறுகளுக்கு மீள் விளக்கமளித்தல்.
6. ஆசிரியச் சேவைத் தொகுதியை ஒன்றிணைத்து தொடர் கல்வியை உள்ளடக்கிய தொடர் வாழ் நாள் செயல் முறையாக வளர்த்தல்.
7. இலக்குகள், உள்ளடக்கம், முறையியல்கள்,வியூகங்கள், நுண்முறைகள், வளங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஆசிரிய கலைத்திட்டத்தை திருத்தியமைத்தல்.
8. விருத்தியடையும் நாடுகளுக்குச் சிறப்பாக உரியதெனக்கருதப்படும் வறிய பிள்ளைகளுக்குப் பொருத்த மானவகையில் கலைத்திட்டம், கற்பித்தல் முறையியல்கள் முதல்யவற்றை உருவாக்குதல்.
9. பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் களிடத்தும் மக்களாட்சி நடத்தைக் கோலங்களை வளர்த் தல்.

மேற் கூறியவற்றை உள்வாங்கி ஆசிரிவாண்மையை

மேம்படுத்தும் இலக்குகள் சமகாலத்தில் விரிவடையத் தொடங்கியுள்ளன. The International Stantard classification of Education - (ISCED)

கல்வியின் அனைத்துலக தரமிய வகைப்படுத்தல் ஆவணம் ஆசிரியர் வாண்மை பற்றிக் குறிப்பிடும் பொழுது ''கல்வி'' என்பது கற்றலை உருவாக்கக்கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட பராமரிக்கத்தக்கதான தொடர்பு முறை வடிவமைப்பு என்ற பரந்த வரை விலக்கணத்தைத் தருகின்றது. ''பயிற்சி'' என்பது திறன்களைத் திரட்டிக் கொள்வதற்கான கல்வியின் நெறிப்பாடு என விளக்கியுள்ளது.

Education is organised and sustained communication designed to bring about learning - while Training is reserved for "Education that is directed mainly towards the acquistion of skills"

இதனடிப்படையில் சேவைக்கு முன்னைய ஆசிரியர் பயிற்சி இலங்கையில் பின்வரும் நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1) பல்கலைக்கழகங்களின் கல்வியியல் மானி (Bacher of Education) பட்டப்படிப்பு கற்கை நெறி.
2) தேசிய கல்வியியல் கல்லூரிகளினால் வழங்கப்படும் கல்வியியல். டிப்புளோமா கற்கைநெறி
3) கல்வித்திணைக்களம் தரும் பயிற்சிகள் இவை இலங்கையில்பல்வேறு தர அளவுகளில் வழங்கப்படுகிறது.

இவை பல்கலைக்கழகங்கள் சம்பந்தப்படும் பயிற்சிகள், பல்கலைக்கழகங்கள் சம்பந்தப்படாத பயிற்சிகள் என இருவகைப்படும். இதனை அடியொற்றித் தர வேறுபாடுகள் காணப்படும்.

ஆசிரிய வாண்மைக் கல்வி (Professional Education) இலங்கையில் பின்வரும் அமைப்புக்களின் வழியாக வழங்கப்படுகிறது.

1. பல்கலைக்கழக கல்வியியல் துறைகள்
2. தேசிய கல்வியியல் கல்லூரிகள்
3. தேசிய கல்வி நிறுவகம்

4. ஆசிரியர் கலாசாலைகள்

இந் நிறுவனங்களின் பயிற்சி முறைகளிலே தரவேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றின் உட்கட்டுமான வசதிகளைப் பொறுத்தும் தரவேறுபாடுகள் காணப்படுகின்றன.

இலங்கையில் உருவாக் கப்பட்டுள்ள ஆசிரிய கொள்கைத் திட்டங்கள் பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றன.

1. வாண்மைப் பயிற்சி பெறாத ஆசிரிய நியமனங்களை நிறுத்துதல்.
2. புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்கள் அனைவருக்கும் அதிகார சபையினால் (NATE) அடிப்படையான வாண்மைப் பயிற்சி வழங்குதல்.
3. ஆசிரியர்கள் தேவைக்கேற்றவாறு திட்டமிடப்பட்டு ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்குரிய எண்ணிக்கை தீர்மானித்தல்.
4. ஆசிரிய, மாணவ விகிதாசாரம் (PTR) ஆரம்பபிரிவுக்கு 26 :1 இடை நிலைக்கு 22:1
5. மிகவும் கஷ்டமான பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்க முற்படுதல்.
6. தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பொழுது அவர்கள் க.பொ.த.(உ.த) தேர்வில் ஈட்டிய புள்ளிகளுடன் ஆசிரிய வாண்மை சார்ந்த உளச்சார்பும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் மென்ற கொள்கையை வலியுறுத்துதல்.
7. ஆசிரியர்கள்தெரிவிலும் நியமனங்களிலும் அரசியல்அழுத்தங்களுக்குஇடமளிக்காதுவிடல்.
8. தேசிய கல்வியற் கல்லூரிகளுக்குப் பல்வேறு பொறுப்புக்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளன. பணிக்காலப் பயிற்சி வழங்குதல் ஆசிரியர் கல்வி மையங்கள் (Teacher Centers) என்பவற்றின் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துதல் முதலியவைமேலதிக பொறுப்புக்களாக உள்ளன.

ஆசிரிய வாண்மைக் கல்விக்குரிய தொடக்க நிலைக் கல்வித்திட்டம் அல்லது பாடவிதானம் பின்வரும் உள்ளடக்கத்தைக்கொண்டவையாக அமைக் கப்படும்.

1. கற்பவர்கள் பற்றிய அறிவு,

பாடசாலைக் கல்வி நிலை பற்றிய அறிவு, கற்பிக்கும் செயல்முறை அறிவு.

2. பாடஅறிவையும் அந்தஅறிவைக் கையளிப்பதற்குரிய முறையியல்களையும் கற்றல் கற்பித்தல் நுண்முறைகளையும் ஒன்றிணைக்கும் ஆற்றல்.
3. பாடத்திட்டம் தொடர்பான நோக்கங்கள் இலக்குகள் பாட உள்ளடக்கம் தொடர்பான மீள் நிலைஆற்றலைப் பெறுவதுடன் உயர் மட்டங்களில் அவற்றைப் பயன்படுத்துதல்.
4. பயிற்சித் திறன்களை வளம்படுத்த நவீன அணுகுமுறைகளையும் நுட்பவியல்களையும் பயன்படுத்துதல்.
5. மதிப்பீடு கணிப்பீடு தொடர்பான ஊக்கங்களை அறிதல்.
6. பள்ளிக்கூட முகாமை.
7. பள்ளிக்கூடமும் கூடவுள்ள சமூகமும்.
8. ஆசிரிய ஆளுமை.
9. ஆசிரியர் என்பவர் தலைவர் மற்றும் புத்தாகம் செய்பவர் என்ற நிலைகள் பற்றிய அறிவு.
10. ஆசிரியர் தேசநிர்மானி (Nation Builder) என்பது பற்றிய அறிவு.

ஆசிரிய வாண்மை விருத்தியில்இன்று முன்வைக்கப் பட்டுள்ள ஒரு பிரதான கருத்தும் செயற்பாடும் தொடர் கல்வி (Continuing Education) பற்றியதாகும். இதில் நான்கு வகைகள் வலியுறுத்தப்படுகின்றன.

1) தரமுயர்த்தலும், தரமேம்பாடு பற்றியது.
2) மேலதிக தகமைகளைப் பெறும் விரிவாக்கல் பற்றியது.
3) மீள் பயிற்சி பற்றியது.
4) புத்தூக்க ஆக்கம் பற்றியது.

ஆசிரிய வாண்மை தொடர்பான இலக்கு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (NATE, National Teacher Education Policy,2001).

1. ஆசிரிய ஆட்சேர்ப்பில் உயர்ந்த தரங்களை முன்வைத்தல்.
2. ஆசிரிய கல்வியியலாளரின் (Teacher Educations) திறமைகளை காலத்திற்குக் காலம் விருத்தி செய்தல்.
3. பல்கலைக்கழகங்களில்கல்வித் துறைகள் ஆசிரியகல்வி நிறுவனங்களாகியவற்றிற்குரிய நிதிவளங்களையும் பிற வளங்களையும் மேம்படுத்துவதோடு சர்வதேச ரீதியான இணைப்புக்களைஏற்படுத்தித்தர மேம்பாடுகளைப் பராமரித்தல்.

4. ஆசிரிய கல்விச் செலவுகளுக்கும் அவற்றின் பலாபலன்களுக்குமிடையே உள்ள தொடர்புகளை தொடர்ந்தும் பரிசீலனைக்குஉட்படுத்துதல்.
5. ஆசிரிய வாண்மை நிலையை மேம்படுத்தி சுமார் 10% ஆசிரியர்களை கலாநிதிப் பட்டம் பெறச்செய்தல். 45% ஆசிரியர்களை முதுமானிப் பட்டம் பெறச் செய்தல். மிகுதியி னரை பட்டப்படிப்பின் கல்வித் தகமைச் சான்றிதழ் பெறும் நிலையை உருவாக்குதல்.
6. ஆசிரிய வாண்மை தொடர்பான ஆய்வுகளுக்கும்.வெளியீடுகளுக்கும் உற்சாகந்தருதல்.

## நிறைவுரையாக

ஆசிரியம், ஆசிரியவாண்மை, ஆசிரிய அந்தஸ்து தொடர்பான மாற்றுவகைக் கருத்துக்கள் அவசியம் என்பது இலங்கையின் கடந்தகாலக் கல்வி நிலபரங்களை ஆராயும் பொழுதுமுகிழ்த்தெழும் சிந்தனையாகவுள்ளது. அவ்வப் போது மேற்கொள்ளப் பெற்ற சீர்திருத்தங்களும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஒருபுறம் வளர்ச்சியையும் மறுபுறம் பின்னடைவையும் காட்டுகின்றன. இவற்றின் அடிப்படையாகச் சில சிந்தனைகளைமுன்வைத்தல் பொருத்தமானது.

1. மேலைப்புல ஆசிரியர் அமைப்புக்களையும் உள்ளடக்கங்களையும் திறன் ஆய்வின்றி உள்வாங்கி நடைமுறைப்படுத்தும் பொழுது பலஇடர்கள் ஏற்படுகின்றன. ஆசிரியர்கள் தாமாகஇயங்கும் வல்லமையிலிருந்துமாற்றம் பெற்று (SUBJECT) வெறும் வினைப்படுவோராக உருவாக்கின்றனர். மேலை நாட்டு உளவியல் அபத்தங்களை அவர்கள் இனங்காண முடியாதிருக்கின்றனர். தாமே சுயமாக முடிவெடுக்க முடியாத விடுதலை அச்சம் (Fear of Freedom) அவர்களைச் சூழ்ந்துள்ளது. மௌனப் பண்பாடு (Culture of Silence) ஆசிரியர்களிடத்து மேலோங்கிச் செய்யப்படுகின்றது.
2. போட்டிச் சமூகத்துக்குரிய நிலைவரங்களை நோக்கியே ஆசிரியக் கல்விதிட்டமிடப்படுகின்றதேயன்றி அகன்ற பார்வையுடனும்யதார்த்தங்களில்நின்றும் பிரச்சனைகளை ஆராய்தல்பொதுவாகமுன்னெ

டுக்கப்படுவதில்லை. ஒரு சில உயர்ந்த உத்தியோகங்களை நோக்கியே முழுகல்வி முறைமையும் ஆசிரியரும் முடுக்கிவிடப்பட்டுள்ளனர்.

3. மாற்றங்களை வருவிப்பதற்குரிய நுண்விசையாகக் கல்வி விளங்குதல் ஆசிரியத்துவத்துடன் நேரடியானசம்பந்தமுடையது.சமூக ஒழுங்கமைப்பின்உயர்நிலைக்கட்டமைப்பை பேணுவோரே ஆசிரியம் பற்றிய தீர்மானங்களை எடுப்பதால் மாற்றத்தின் அனுகூலங்கள் சமூகப்படுநிலையில் உயர்ந்தவர்களுக்கே அனுகூலமாக்கப்படுகின்றன.

4. நடத்தைக்காட்டுருக்களே (Behaviourist Model) ஆசிரியர் உருவாக்கத்தில் பெருமளவு பின்பற்றப்படுகின்றன.ஒரேவிதமான கோலங்களை உடைய ஆசிரியத்துவம் பற்றிய சிந்தனைகளே மேலோங்கி வருகின்றன.

5. எதிர்பார்புக்கள் வாயிலாக ஏற்றத்தாள்வுகளையும் பிரித்து ஆளுதலை (Discrimination byExpectation) உருவாக்கும் அபத்தமான நிலை வகுப்பறைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் சமூகத்திலும் மேற்கொள்ளப்படுகின்றது.

6. மாற்றுவகையான உளவியல் கருத்துக்களோ மாற்றுவகையான கல்விக் கோட்பாடுகளோ (உதாரணம் போலோ பிறேறி Paulo Freire, மிசேல் பூகோ MichelFocault) ஆசிரியர் கல்வித் திட்டங்களிலே சேர்க்கப்படுவதில்லை.

7. ஆசிரியர்கள் பலராலும் விமர்சிக்கப்படும் நிலைக்கு உள்ளாக்கப்படும் விசையின் தாக்கங்களுக்கு ஏற்றவாறு ஆசிரிய வாண்மையை உயர்த்தும் நடவடிக்கைகளின் அளவும் விசையும் பங்கு பற்றலும் சமூகத்தினால் கருத்திற் கொள்ளப்படவில்லை.

8. ஆசிரியரை இயக்கும் நிர்வாகப் பணிகளிலே காலதாமதங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக நவீன வசதிகள்பல வளர்ச்சியடைந்துள்ளபோதிலும்ஆசிரியர்கள் தமக்குரிய ஓய்வூதியங்ளைப் பெற்றுக் கொள்ளல் அதிகசிரமமும் உளத்தாக்கங்களும் ஏற்படுத்தும் நடவடிக்கையாகவே உள்ளது.

9.இலங்கையின் இனக்குழு விகிதாசதரம்ஆசிரிய நியமனங்களிலும் ஆசிரியபதவி உயர்வுகளிலும் பராமரிக்கப்படாமை

யால் தமிழ்மொழி மூல ஆசிரியர்களும் பிள்ளைகளும் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

இலங்கையின் ஆசிரிய வாண்மையும் வாண்மை விருத்தியும் இலங்கையின் அரசியற் பொருளாதார சமூக கோலங்களுக்கு ஏற்றவாறே இடம்பெற்று வந்துள்ளமையால் அவற்றின் வாயிலாக அனுகூலம் பெற்றோர் ஒரு சாராராகவும் அனுகூலம் பெறாதோர் இன்னொரு சாரராகவும் இருக்கும் இருமை நிலை ஆசிரிய வாண்மையில் மிகத்தெளிவாகக் காணப்பகின்றது.

## REFERENCES


1.NATE,National Teacher Education Policy, Colombo 2001.

2...................... Contimuing Teacher Education, Colombo 2001

3..................... Towords Excellence in Teacher Education 's, Colombo 2001.

4.Act No. 32 of 1997. National Authority on Teacher Education.

5.Ministry of Education Quidelines for Inlernship for National Collegses of Education, Colombo 2002.

6.Sessional Paper No. 1 - 1990 Report of the Presidential Commission on youth Colombo 1990.

7.Paulo Freire, Pedagogy of the Oppressed, penguin, 1986.

8......................Education for Liberation, ECC, Bengalore,1983.

9......................Pedagogy in Progress, WRPC, Britain, 1987.


**பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சாசனத்திலிருந்து:**

1. 18 வயதிற்குக் குறைந்த ஒருவர் பிள்ளையாகக் கொள்ளப்படல் வேண்டும்.
2. கருத்து வெளியிடவும் தன்னைப்பாதிக்கும் யாதேனும் ஒரு விடயத்தின் மீது கவனம் செலுத்தவும் பிள்ளைக்கு உரிமையுண்டு.
3. பாரபட்சம், உதாசீனம் ஆகியவற்றிலிருந்து பிள்ளைகளைக்காத்தல் அரசின் பொறுப்பாகும்.
4. பாடசாலையின் கட்டொழுங்கு நிருவாகமானது பிள்ளையின்மானிட கௌரவத்தை உறுதிப்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

# ஆசிரியர் கல்வி மையங்களின் ஊடாக இடையறாத ஆசிரியர் கல்வி


## கலாநிதி ஐ.எல்.கினிகே

உதவிப்பணிப்பாளர் நாயகம் தொழில்சார் அபிவிருத்தி தேசியகல்வி நிறுவகம்.


ஆசிரியர்களின் நான்கு வகையான தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் தொடர் ஆசிரியர் கல்விப் பாடநெறிகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. நினைவில் இருந்து நீங்கிய அறிவு, திறன்கள் பற்றிய ஞாபகத்தைப் புதுப்பித்து, ஆசிரியர்களுக்கு புத்துணர்வூட்டுவதே முதலாம் வகைத் தேவையாகும். கால ஓட்டத்துடன் அறிவு நாட்பட்டு விடுகின்றமையை நாம் அறிவோம். எனவே அறிவை இடையறாது "தற்காலப்படுத்த" வேண்டியது அவசியமாகும். இத்தேவையை நோக்காகக் கொண்டு இரண்டாம் வகைப் பாடநெறி திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்துறையிலும் சேரும் புத்தறிவு தொடர்பான விழிப்பை ஆசிரியர் இடத்தே ஏற்படுத்தி, அவர்களது அறிவையும் திறன்களையும் மேம் படுத்தும் நோக்குடன் மூன்றாம் வகைப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. கல்வித் தொகுதியல் ஏற்படும் மாற்றங் களுக்கு இசைவடையக் கூடியவாறாக ஆசிரியர்களை மாற்றியமைக்கும் நோக்குடன் நான்காம் வகைப் பாடநெறி உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆசிரியர்களுக்கு மீள் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படும். தாம் ஏற்கனவே பயின்று பயிற்சி பெற்றுள்ள விடையத்தை விடுத்துப் பிறிதொரு பாடத்தில் பயிற்சி பெற்று புதிய தொரு வழியில் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு ஆசிரியர்கட்கு வழங்கப்படும். இதுவரையில் திட்டமிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சி பாட நெறிகள் யாவும் ஆசிரியரை ஒரு குறித்ததுறையிலே பயிற்றுவிப்பனவாகவே அமைந்தன. ஆசிரியர்களை குறித்தொதுக்குதல் தொடர்பான பல்வேறு பிரச்சனைகள் இதன் விளவாக உருவாயின. எனவேபுதியகல்வி சீர்திருத்தப் பிரேரணைகளுக்கு அமைய, ஆசிரியர்கட்கு இரண்டாம் பாடத்துறைகளில் பயிற்சி

பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

மேற்படி நான்கு வகையான பாடநெறிகளையும் நடைமுறைப்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்ட புதிய வேலை திட்டமே, ஆசிரியர் தொடர் கல்வித் திட்டமாகும். இத்திட்டத்தை நடைடமுறைப் படுத்துவதற்காக ஸ்தாபிக்கப் பட்டுள்ள புதிய அமைப்புக்களுள் ஆசிரியர் மையங்களும் (Teacher Centers),ஆசிரிய கல்விநிறுவனங்களும் (Teacher Education Institutes) முக்கிய இடத்தைப் பெறுகின்றன ஏற்கனவே நாடளாவிய ரீதியில் ஆசிரியர் மையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆசிரியர்களுக்காக வதிவிட வசதிகள் இன்றி ஒருநாள் அல்லது இருநாள் பாட நெறிகளை நடத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான கலைத்திட்ட ஆவணத் தயாரிப்பு, விரிவுரையாளர் பயிற்சி ஆகிய பணிகள் தேசிய கல்வி நிறுவகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஓர் ஆசிரியர் மையம் வீதம் அமைய வேண்டும் எனவும் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்த நிறுவனங்களாகிய தேசிய கல்விக் கல்லூரிகளை மையமாகக் கொண்டு, அவை நிறுவப்பட வேண்டுமெனவும் எதிர்பார்க் கப்படுகின்றது. வலயககல்விப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் செயற்படும் வலய தொழில்சார் அபிவிருத்திச் சபைகள்மூலம் இந் நிலையங்களின் பணிகள் இணைப்புச் செய்யப்பட வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆசிரியர் மையத்திற்கும் குறைந்த பட்சம் முகாமையாளர் ஒருவரையும் அவருக்குத் துணையாக மேலும் மூவரையும் நியமிக்க வேண்டும் எனும் தேவை உணரப்பட்டுபள்ளது. இவ்வாறு பொருத்தமானோரை ஆசிரியர் கல்விசார் சேவையச் சேர்ந்தோரில் இருந்து தெரிவு செய்து நியமிக்கும் பொறுப்பைக் கல்வி அமைச்சு ஏற்றுள்ளது. விடுதி வசதிகளின்றி, குறுகிய கால ஆசிரியர்கல்வி வேலைத்திட்டங்களை இந்நிலையங்களினூடாக நடத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட நாட்கள் வரை நீடிக்கும் ஆசிரியர் கல்வி வேலைத் திட்டங்களை நடத்தும் பொறுப்பு ஆசிரியர் கல்வி நிலையங்களைச் சார்ந்ததாகும்.

மாகாண மட்டத்தில் மிகை யாகக் காணப்படும் கல்விக் கல்லூரி கள்சிலவும் இதற்காக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை காலமும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த குறிப்புக்கள் குறித்த ஆட்தெரிவு கொள் கைக்கு அமைய முற்றுப் பெற்றதன் பின்னர் அவ்வாசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் இப்ப ணிக்காகப் பயன்படுத்த வேண்டு மென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பத்து வருடங்-களுக்கு மேலாக தேசிய கல்வி நிறுவனத்தினால் பிரதேசரீதியில் பெருந்தொகையான ஆசிரியர் நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பொதுவாக நிருவாக மாவட்டங்களின் பிரதான நகரங் களில் அமைந்துள்ள இந்நிலை யங்கள் பல வகைப்படும். பட்டப்பின் கல்வி டிப்புளோமா நிலையங்கள், கல்வி மாணிப் பட்டப் படிப்பு நிலையங்கள், ஆசிரியர் தொலைக்கல்வி நிலை யங்கள், மேலதிக மொழிவிருத்தி நிலையங்கள், கணனி வள நிலையங்கள், பிரதேச ஆங்கில மொழித்துணை நிலையங்கள், பிரதேச ஆங்கில ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் என்பனவே அவையாகும். நாடெங்கிலும் இவ்வாறான இருநூறுக்கும் மேற்பட்ட நிலையங்கள் உள்ளன. இந்நிறுவனங்கட்கும் புதிய எண்ணக் கரு ஸ்தாபிக்கப் பட்டுள்ள ஆசிரியர் மையங்க ளுக்கும் இடையில்ஒரு பிணை ப்பை ஏற்படுத்திக் கொள்ள <u>முடியுமாயின் அது ஆசிரியர் கல்விவலைய மைப்பை பிரதான நகரங்களை மையமாகக் கொ ண்டு வலிமைப் படுத்திக் கொள்ள பெரிதும் துணையாக அமையும். வினைத் திறன் தொடர்பாகத் தற்போது தோன்றியுள்ள பல்வேறு குறை பாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் தூரப்பிர தேசங்களில் செயலாற்றும் ஆசிரிய ஆசிரியைகட்கு புதிய தொழில் நுட்பத்ததைப் பயன் படுத்தி பயனுறுதியுடைய கற்றல் வாய்ப்புக்களை வழங்கு வதற்கும் இது வழிகோலும் என்பதில் ஐயமில்லை.</u>

ஆசிரியர்மையங்களினூடாகப் பல பணிகள் ஆற்றப்பட வேண்டு மென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர்களது தேவையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியஅபிவிருத்தி வலைத் திட்டங்

களை நடைமுறைப்படுத்துவது அவற்றுள் முக்கியமானதாகும். முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் ஆசிரியர்களின் உண்மையான பிரச்சனைகளை இம்முறையில் இனங்காண்பது கடினமானது என்பது ஆராய்ச்சி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியருடன் புளங்கியவாறு அவர்களுடன் உரையாடியும் அவர்கள் செயற்படும் விதத்தை நுணுகி அவதானித்தும் அவர்களது உண்மையான கல்வி தேவைகளை மதிப்பிடும் வகையில் ஆசிரியர் மையங்கள் முன்வருதல் வேண்டும்.

இவ்வாறாக ஆசிரியர் மையங்கள் இனம்காணும் தேவைகள் 1.விடயம்சார்ந் தவை, 2.தொழில் சார்ந்தவை என இருவகைப்படும். மிகப் பொருத்தமானவாறு தொடர்கல்வி வேலைத்திட்டங்களைத் திட்டமிடுவதற்கு இவ்வகைப்பாடு பெரிதும் உதவும். வலய மட்டத்தில் தொழில்சார் அபிவிருத்தி தேவைகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மாகானமட்டத் தொழில் சார் அபிவிருத்தித்தேவைகளையும் அவற்றை மேலும் பகுத்தறிவதன் மூலம் தேசிய மட்ட தேவைகளையும் இனங் காணலாம். தேசிய மட்டத்தில் புதிய கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள், ஆசிரியரின் ஆராய்ச்சிச் செயற் பங்கு போன்ற தலைப்புக்கள் முன்னுரிமை பெறுகின்றமையைக் காணமுடிகின்றது. சிறிய பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் பல்தரக் கற்பித்தலே முன்னுரிமை பெறும் நிலையில் உள்ளது.

தொழில் சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தவிர்ந்தவிடத்து பல உதவிச் சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் ஆசிரியர் மையங்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒருமுகப்பட்ட வகையில் தயாரிக்கப்படும் கலைத்திட்டத்தை, வலய நிலமைகட்கும் பொருத்தமானவாறு இசைவுபடுத்திக் கொள்ளல், வகுப்பறைக்குத் தேவையான கட்புல-செவிப்புல சாதனங்களைத் தயாரித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கி வகுப்பறை சார்ந்த பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டியஉதவி ஒத்தாசைகளை வழங்குதல் போன்றவை இவற்றுள் முக்கியமானவையாகும். பாடசாலை நேரத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் இந்த

நடவடிக்கைகள் தவிர்ந்த விடத்து சகவாடிகளுடன் சேர்ந்து ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கழிப்பதற்கும் சமூகத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கும் இம்மையங்கள் ஆசிரியர்கட்கு உதவி செய்தல் வேண்டும்.

ஆசிரியர் மையங்களால் நடத்தப்படும் வேலைத் திட்டங்களில் ஆசிரியர்கள் பங்குபற்றும் அளவிலேயே அவற்றின் வெற்றி தங்கியிருக்கும் எனவே ஆசிரியர் மையங்களின் பணிகள் தொடர்பாக வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களிடத்தே விழிப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். ஆசிரியர் மையம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய சிற்றேடுகளை விநியோகித்தல், பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் மையப் பிரதிநிதிகளை நியமித்தல், அவர்களின் உதவியை இடையறாது பெறல், போன்ற வழிகளை இதற்காகக் கையாள முடியும். பல செயற்பாடுகளை ஆற்றக்கூடிய வகையில் இந் நிலையங்களின் முகாமையை வலுப்படுத்தல் இன்றியமையாததாகும். ஆசிரிய ஆசிரியைகள் எளிதாகச் சென்றடையக் கூடியவாறான இடங்களைத் தெரிவு செய்து சிதறிக்காணப் படும் ஆசிரியர் நிலையங்களை ஒருமுகப்படுத்துதல், மையத்தின் குறிக்கோளை அடையக் கூடிய வாறாக ஆசிரியர் மையகட்டட வசதிகளை விசாலித்தல், ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித் தனியே விநியோகிக்க வசதியற்ற அதிவிலையுடைய சிறப்பான உபகரணங்களை ஆசிரியரின் பயன் பாட்டுக்காக ஆசிரியர் மையங்கட்டு வழங்குதல், கல்வி சார்ந்த மற்றும் நிர்வாகம் சார்ந்த அறிவையும் ஆற்றல்களையும் கொண்ட தகுதி மிக்க பணியினரை மிகக் கவனத்துடன் தெரிவு செய்தல். ஆகியவற்றுடன் ஊடாக வலயத்தின் ஆசிரியர் கல்விப் பணிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆசிரியர் மையங்கள் மேற்கொள்ளலாம். ஆசிரியர் மையங்களின் பணிகளை ஆசிரியர் தொழில் சார்ந்த அபிவிருத்திக்கு மாத்திரம் வரையறைப்படுத்துவதைத் தவிர்த்து அதனை பல்பணி மையமாக விருத்தி செய்தல் வேண்டும். ஆசிரியர்கள் என்னும் ஏற்றப்பட்ட ஒளி விளக்குகளை அணையாது தொடர்ந்து பிரகாசிக்கச் செய்யும் பணியை தேசிய கல்வி நிறுவகம் செவ்வனே நிறைவேற்ற வழி பிறந்துள்ளது.

# கல்வியின் புதிய குறிக்கோள்களில் கற்பதற்குக் கற்றல் ஒன்று:

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

''கற்றலுக்குக்கற்றல்'' என்பது கற்றலில் மிக ம்கியத்துவம் வாய்ந்ததாகும். சுயமாகப் பெறும் அறிவே மிகமுக்கியத்துவம் வாய்ந்த நவீன கல்விச் சிந்தனையாகும். மரபுவழிப் பாடசாலைப் பாட ஏற்பாடு, பயனுள்ள அறிவுத் தொகுதியையும், சில அடிப்படைத் திறன்களையும் வழங்குகின்றது. இவை வாசிப்பு, எழுத்து, கணிதம், செய்முறைப் பாடங்கள், விஞ்ஞானம், மனிதப் பண்பியல், துறைகளில் ஆராய்ச்சிகளினூடாக நாளாந்தம் அறிவுப் பெருக்கம் ஏற்பட்டுவருகின்றது. இதன் காரணமாக பாடசாலையில் பெறப்படும் அறிவுத் திறன்களும் சில காலத்தின் பின்னர் காலாவதியாகி, பயனற்றும், பொருத்தமற்றும் போகின்றன. இதனால், பாடசாலைக் காலத்தினை பின்னரும் புதிய அறிவையும் திறன்களையும் சுயமாகக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

வாழ்நாழ் முழுவதும் அறிவையும் திறன்களையும் புதுப்பித்துச் செல்லும் போது, புதிய விஞ்ஞான, தொழில் நுட்ப சமுதாயத்தில் இணங்கி வாழ்வது சாத்தியமாகின்றது. கல்வியானது, வாழ்க்கை முழுவதும் நீடித்தல் வேண்டுமென இன்று வலியுறுத்தப் படுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். எனவே,பாடசாலைக் கல்வி, மாணவர்கள் விலகிய பின்னரும் புதிய அறிவையும் திறன்களையும் கற்றுக் கொள் வதை இலகுபடுத்தும் விதத்தில்

சுயமாகக் கற்கும் வழிமுறை களை போதிப்பதாக அமைதல் வேண்டும் என்பது கல்வியாளர் களின் கருத்து.

பொதுவாகப் பாடசாலைப் பாடஏற்பாட்டில் இவ்அம்சம் வலியுறுத்தப்படுவதில்லை சுயமாகக் கற்பதற்கான பல்வேறு உபாயங்கள் உண்டு. பிரச்சினை தீர்க்கத்தெரிதல், நினைவாற்றலை நன்கு பயன்படுத்தத் தெரிதல், கல்விப் பணிகளைச் செய்வதற்குப் பொருத்தமான முறைகளைத் தெரிவு செய்தல் என்பன அவற்றுட் சிலவாகும்.இவை பற்றிய பயிற்சி நெறிகள், மேலை நாடுகளில் உயர் இடைநிலையிலும் கல்லூரி நிலையிலும் அறிமுகம் செய்யப்பட்டன. ஆனால் அந் நிலையில் ஏற்கனவே உருவாகி விட்ட கற்றல் முறைகளை மாற்றிக் கொள்வது கடினமாகும். கற்றல் உபாயங்களைப் புரிந்து கொள் ளல். சுயமாக அறிவைப் பெற் றுக் கொள்ளல், கற்கும் போது பயன்படுத்தப்படும் செய்முறை களை விளங்கிக் கொள்ளல் என்பன எமது கற்றலுக்குநாமே பொறுப் பேற்கும் நிலைமையை உருவாக்குகின்றன: அத்துடன் கற்றல் வழிமுறைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் இவைவழிவகுக்கின்றன.

உளவியலாளர் கருத் தின்படி, கற்கும்போது உள்ளம் எவ்வாறு தொழில்ப் படுகின்றது என்பதை அறிவதிலேயே கற்ற லுக்குக் கற்றல் தங்கியுள்ளது. அவர்கள் இதனை ''ஏழாவது புலன்'' எனக் கூறுவர். பாடசா லைப்பாட ஏற்பாடு இப்புலனை மாணவர்களிடம் வளர்ப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொள்ளல் வேண்டும் என்று உளவியலா ளர்கள் வலியுறுத் துகின்றனர்.

இதுபோன்று கருத்து பதினெட்டாம் நூற்றாண்டிலும் வலியுறுத்தப்பட்டது. பிரெஞ்சு தத்துவஞானி ரூசோவின் கருத் தின்படி, பல்வேறு விஞ்ஞா னங்ளை மாணவர்களுக்குக் கற்பித்து விடுவது எமது பணியன்று அவ்விஞ்ஞானங்களில் அவர் களுக்கு சுவை ஏற்படுத்தப் படல் வேண்டும். இச்சுவை மேலும் முதிர்ச்சியடையும்போது விஞ்ஞானம் கற்கும் முறை களைப் பயிற்ற வேண்டும். இது சிறந்த கல்விக்கான அடிப்படை என்பது அவரது கருத்து. இது

கற்பதற்குக் கற்றல் பற்றிய நவீன கருத்துடன் ஒத்துச் சென்றாலும் ரூசோ முறைசார்ந்த கற்பித்தலுக்கு அப்பால் புறம்பாக இவ்வாறான உளப்பாங்குகளை வளர்க்க வேண்டுமென்று கூறினார். இன்றைய கல்வியலாளர்கள் மாணவர்கள்கற்றல் அனுபவத்தைப்பெறும் போதே கற்பதற்குக் கற்கும் வழி முறைகளை வளர்த்துக்கொள்ள உதவ வேண்டும் என்று கருதுகின்றனர்.

கற்றலுக்குக் கற்றல் என்னும் புதிய சிந்தனையை அண்மைக் காலத்தில் பல்வேறு சாராரும் கருத்திற் கொள்ளத் தொடங்கியுள்ளனர். பாட ஏற்பாட்டு வல்லுனர்கள், அறிவு சார் உளவியலாளர், கல்விச் சீர்திருத்தங்களை முன்வைப்போர் போன்றோரை இச்சிந்தனை பெரிதும் கவர்ந்துள்ளது. மாணவர்கள் கட்டாயக் கல்வி பெறும் காலத்திலேயே 'அவர்கள் கற்பதற்குக் கற்றுக்கெள்ள' வேண்டும் என்று இவர்கள் விரும்புகின்றனர். நவீன தொழில் நுட்ப சமுதாயத்தில் யாவரும் வாழ்க்கை நீடித்த கல்வியைப் பெறல் வேண்டும் என்று இன்று வலியுறுத்தப்படுகின்றது. அவ்வாறெனின் பாடசாலைகள் மாணவர்கள் தாம் விலகிய பின்னரும் கற்பதற்கான வழிமுறைகளை அறிவுறுத்தல் வேண்டும்.

இங்கிலாந்தில் வெளிவந்த பல கல்வி அறிக்கைகள் அவ்வம்சத்தைப் பெரிதும் வலியுறுத்துகின்றன. 1967ம் ஆண்டின் பிளவ்டன் அறிக்கையில் கூறப்பட்டதாவது:-

பிள்ளையே தனது கற்றலுக்கானமுக்கிய காரணி, தகவல்கள்,நிகழ்வுகள் என்பவற்றை கற்பதைக் குறைத்து மதிப்பிட முடியாது. கற்றல் பற்றிய சரியான உளப்பாங்குகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

இந்த அறிகையின் வேல்ஸ் மொழிப் பதிப்பு இவ்விடயத்தை மேலும் குறிப்பாக வலியுறுத்தியது.

மொழி, கணிதம் பற்றிய திறன்களை வளர்த்துக் கொள்வது மிக அவசியமானது. இவற்றை விட பிள்ளைகள் கற்பதற்குக் கற்றுக் கொள்வதும் முக்கியமானது. பிள்ளைகள் தமக்குத் தேவைப்படும் தகவல்களைப் பெற ஆசிரியர்களில் தங்கியிருக்காது தாமாகவே தேடிக் கண்டறியத்

தெரிந்திருக்க வேண்டும்.

'கற்பதற்குக் கற்றல்' தகவல் களைக் கண்டறியும் திறன்களைப் பெற்றுக் கொள்வதைக் குறிக்கும். அதாவது ஒரு விஷயம் பற்றிய தகவல்களை எவ்வாறு பெறலாம் என்பதைக் கற்றுக் கொள்ளல்

'கற்பதற்குக் கற்றல்' என்பது சில திட்டவட்டமான கோட்பா டுகளை அல்லது அடிப்படைக் கருத்துக்களைக் கற்பதையும் குறிக்கும். அதாவது மிகக் குறிப்பான சிலபிரச்சனைகளைத் தீர்க்கப் பயன்படுத்தக்கூடிய சில பொது விதிகளைக் கற்றுக் கொள்ளல்

'கற்பதற்குக் கற்றல்' துருவி ஆராயும் செயற்பாட்டில் அடிப்-படையான விதிகளைப் புரிந்து கொள்ளும் போது நிகழ்வது. அதாவது பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள் உருவாக உதவிய வழிமுறைகளைக் கற்றுக் கொள்வது. கற்பதற்குக் கற்றல் என்பது கற்றலில் சுயஆட்சித்தன்-மையை வளர்ப்பதைக் கருது-கின்றது. அதாவது ஒருவன் தனது கற்றல் செயற்பாடுகளைத் தானே நிர்வகித்துக் கொள்கிறான். கற்பதற்குக் கற்றல் என்பது ஒருவகை உளப்பாங்கு அல்லது அணுகுமுறை.

கற்பதற்கு கற்றலை மாணவரிடத்து ஏற்படுத்த படிப்புத் திறன்கள் பற்றிய பயிற்சி நெறிகள் மேலை நாட்டுப் பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டன. 1950 களில் பல்கலைக் கழகங்களிலும் பின்னர் பாடசாலைகளின் உயர் தர வகுப்புகளிலும் இப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு திறந்த பல்கலைக்கழ கங்களும் எவ்வாறு படிப்பது என்னும் விடயத்தில் கைநூல் களை வெளியிட்டன.படிப்பதற்கு உதவக்கூடிய திறன்கள் ஒரு பாடசாலைப் பாடம்தொடர்பாகவே கற்பிக்கப்படுவதுண்டு அப் பாடத்தை நன்கு சுயமாகக் கற்றுக் கொள்ள இத்திறன்கள் உதவக்கூடும்.ஆயினும் இந்தக் கற்றல் திறன்- களைப் பிறிதொரு சந்தர்ப்- பத்திலோ அல்லது வேறு பாடங்- களைக் கற்கும் போதோ இட மாற்றம் செய்யப்படும் எனக் கூறுவதற்கில்லை. இவ்வாறு இத் திறன்களைப் பிற சந்தர்ப்பங்-களில் பயன்படுத்தும் வகையில்

மாணவர்களுக்கு கற்பிக்கப்படுவதில்லை. மறுபுறம் ஒரு பாடத்தோடு தொடர்பு படுத்தாமல் இக்கற்றல் திறன்கள் பற்றிப் பொதுவாக மாணவர்களுக்கு அறிவுறுத்த முடியும். ஆனால் இவ்வாறு செய்வதனால் அதிக பயனில்லை என்றும் இத்திறன்களை ஒருகுறிப்பிட்டநிலமைக்குப்பயன்படுத்த முடியாது போய்விடும் என்றும் கருதப்படுகின்றது. புதிய சிந்தனையின் படி கற்றல் திறன்களைப் பாடசாலைப் பாடங்களுடன் தொடர்புபடுத்தாது மாணவர்கள் தங்களை நன்கு விளங்கிக் கொள்வதை நோக்கமாக் கொண்டதாகக் கற்பித்தல் அமையவேண்டுமெனக் கூறப்படுகின்றது. அதாவது மாணவர்கள் கற்கின்ற வழிமுறைகள் பற்றிய புரிந்துணர்வை அவர்களிடத்து ஏற்படுத்த இறுதியில் மாணவர்கள் தாமாகவே பல கற்றல் உத்திகளை விருத்தி செய்து கொள்வர் என்பது இன்றைய கல்விச் சிந்தனையாகும். பல்வேறு உளவியற் பரிசோதனைகளும் இச் சிந்தனைக்கு ஆதாரங்களை வழங்குகின்றன.

மாணவர்கள் தமது ஒப்படைகளைச் செய்து முடிப்பதற்குப் பல படிமுறைகளைக் கடந்து செல்ல வேண்டும்.

இவ் வொப்படையில் நான் செய்ய வேண்டியது என்ன?

அதற்கான தகவல்களை எங்கிருந்து பெறலாம்?

எந்த மூலாதாரங்களை நான் பயன்படுத்த வேண்டும்?

இந்த மூலாதாரங்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?

படித்த என்னென்ன விடயங்களைக் குறித்துக் கொள்ள வேண்டும்?

எனக்குத் தேவையான தகவல்கள் கிடைத்துவிட்டனவா?

அவற்றை எவ்வாறு தொகுத்து எழுதுதல் வேண்டும்?

ஆசிரியர்கள் இவ்வாறான வினாக்களைக் கருத்திற் கொண்டு மாணவர்களைச் சுயமாகக் கற்பதற்கான சூழலை ஏற்படுத்தலாம். சுருங்கக் கூறின், மாணவர்கள் எதனைக் கற்கின்றார்கள் என்பதை மட்டுமல்லாது அவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள் என்பது கல்விச் செயற்பாட்டில் முக்கியமானதாகும்.

# IMPORTANC OF LIBRARY AND INFORMATION SEIENCE.

*Mrs. R. Pararajasngam*
Librarian, University of Jaffna.

*Human achievement both meterial and spiritual consists essentially in acquiring knowledge, generating resources, preseruing, adding nascent information subsequently disseminating same. Social heredity consists in transmission of knowledege from generation to generation. A country's development is measured in terms of technological advancement as it brings a tremendous change in the social life of a nation. Libraries play a vital role in transmitting knowledge to individuals which paves the path towards the evelopment of technology. The world library is derived from Lation which means "a Book".*

*The history of library is closely connected whith the history of books. There are evidences for the presence of books and {tool both in life and work.} From time immemorial libraries have the practice of preserving records and the role of the librarion was "Keeper of records". As early as 3rd millennium BC, records of stone inscriptions, clay, tavbets, papyrus roles, parchment codex and ola manuseripts were stored in libraries. With the euolution of printing, society uenderwent a socio economic cultural and tchnological reuolution. The role of the libratian too changed as "Book lender". Unthil 1900 printed materials were the only information vehicle of choice. With the informatoin explosion, caused by the proliferatiom of the interdiseiplimary subjects in 1940s microforms emerged to reduce space to store printed records.*

*The aduent of computers in 1960s brought another major revolution changing the role of librarian as "information Manager"*

*Libraeies scrue as store houses of knowledeg and as centres of dissemination of knowledge or retrieval of such information, expedttiously and systematically. Great libraries have existed as centres of learning to keep the lanp of learning, burning. The libraries had a traditional function in preserving the individualistic cuitural traits of the community it served. The Jaffna public library had, at one time, on its shelves very valuable documents and publicntions that threw lot of lights on the Jaffna man's cultural traditions. Libraries ate bound to maintain theit archival collections with greatcare as their cultural inheritance.*

*The university depends on its library to fulfil its mission of Educating the undergraduates and research scholars. The university has an obvligation to the society as torch bearers of social progress. The knowledge, the university imparts, must have relevance to the great problems of living a purposive life in a changing world. The unicersity library should be attuned to the requirements of the younger generation to enable them to be prepared for the major task of our age.*

*There are special libraries to cater the needs of seience and technology. They serce the purpose of a changing world. There are highly specialised libraries in the developed nations.*

*Professionals and men of leaning build their own private libraries to enable them to peactice their profession with updated knowledge . These libraries serve as windows of the landscape of their lives. An educated society in a society of refined men and women who blieve in the process of a contilued knowledge accumilation.*

*To the students coming from crowded homes or noisy hotels,*

*the library serve as the refuge for quiet study. The library is of immediate value to these students.*

*Libraries hold an esteemed position in being a primary source for acquiring and disseminating the infornmation required by the society. To maintain this position, libraries should be adaptable to changes based on user demands. When information continues to be generated in an ever increasing quantity, libraraies must develop to accommodate the demands of the omnipresent information explosion. The emergence of electronic information technology has led to tremendous changes in the activities of libraries by opening new vistas for exchange of knowledge on the internet and have enabled information seekers to obtain what they require at a greater speed than ever before. Thus the libraries have become the moot pivotal points in the communities in the process of learning.*

*In the past a librarian didn't enjoy the status the post war ranted. The uniqueness of the post was not felt or realised in society. Yet for all, Librarians have produced one of the most remarkable feats of international cooperation in the he last fifty years which has gone unannounced and unaccounted. But their characteristics helped in informing the development of standards for the internet and the world wide webs. Now it is possible to identify any recently published work from any part of the world. The significant skills that the Librarians habe brought as a profession in making the printed word universally available has been overlooked. By ensuring that our humam networks are active and by effectively handling the inflow of paper based information, we caan best serbe our readers, earn the professjonal respect and position ousetues to act as guides at the information revolution. The contributions of the Libraries and Lidrarians should be effectiue and substantial to cope up with the rapid changes to satisfy the aspirations of the community that it serves.*

*Interest in Library studies in Jaffna generated once again in our minds quite recently. Regional branch of the Sri Lanka Library Association conducted coursef at three stages in Jaffna. But due to various constraints the coordination had been hindered and hampered by the rabages of political climate. The violent years of war have scarred the community to a breaking point, the Library science students in Jaffna were de nied the chamce of presenting themselves for the Sri Lanka Library Association examinations in Jaffna. In a situation like this we should pool all our energy resources and contributions together to ensure that proper facilities are provided to debelop the talents of College of Education students in this field. let us strive hard to achieve this mission and make the attempts of the task of the President of this college, a grtat success.*

## தொலை நோக்கு: (Vision)

எந்த ஒரு நிறுவனமும் எதிர்காலத்தில் எவ்வாறு இயங்க வேண்டுமென்ற ஓர் இலக்கினைக் கொண்டிருக்கும். குறித்த நிறுவனம் எதிர்காலத்தில் எத்தகைய செயற்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது அதன் தொலைநோக்கு மூலம் வெளிப்படுத்தப்படும். நிறுவனம் எதிர்காலத்தில் எக்குறிக் கோளை) இலக்குகளை அடைய உள்ளதோ அதுவே அந்நிறுவனத்தின் தொலை நோக்காகும்.

உதாரணமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி எதிர்காலத்தில் சர்வதேச ரீதியான அங்கீகாரத்துடன் மிகச்சிறந்த கல்வியியல் கல்லூரியாக இயங்க வேண்டுமென்ற இலக்குடன் செயல்ப்படுகின்றது. எனவே இக் கல்லூரியின் தொலை நோக்காக: சர்வதேச ரீதியிலான அங்கீகாரத்துடன் மிகச்சிறந்த தேசிய கல்வியியல் கல்வியாகத் தொழிற்படல் என்பதாக அமைகிறது.

# நல்லாசிரியரும் உளநல மேம்பாடும்

திரு. கு. சண்முகநாதன்
சிரேஸ்ட விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம்
அதிபர் - யா மனிப்பாய் இந்துக்கல்லூரி

ஆசிரியர் கல்வி நவீன சிந்தனைகளின் செயல் வடிவமாக மாற்றமடைய வேண்டிய காலத்தேவையை யாரும் உணர்ந்து செயற்படுவதாக இல்லை. ஒரு ஆசிரியர் தனது உளவளத்தை முழுமையாகப் பேணி, தனது மாணவரது உளவளத்தை உயர்த்தும் நெறியாளராக வளர வேண்டும். குறிப்பாக ஆசிரியர் என்ற சொல்லே மாற்றப்பட்டு (Counr-ller) ஆலோசகர் அல்லது சீர்மியர் ஆக்கப்பட வேண்டிய நிலையில் ஆசிரியப்பணியின் தேவை வளர்ந்துள்ளது. உலக மக்களின் சமூக வாழ்வு மிகமிகச் சிக்கலடைந்து விட்டது. குறிப்பாக நமது நாட்டின் உள்நாட்டுப் போரின் தாக்கம் மனித மனங்களைச் சிதைத்து விட்டது. போரின்பிடியில் சிக்கிச் சீரழிந்து யாழ் குடாநாடு உள நெருக்கீட்டுக்கும் மன அழுத்தங்கழுக்கும் ஆழான சராசரி மனிதர்களால் நிறைந்துள்ளது. குறிப்பாக பள்ளிச் சிறார்களும், இளவயதினரும் பல்வகை உள அழுத்தங்களால் பாதிக்கப்பட்டு இயல்பு நிலையில் இருந்து விலகியுள்ளனர். இத்தகைய பாதிப்புக்கள் கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டில் நினைத்துப் பார்க்க முடியாத பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

வீட்டின் சூழல், இருள் சூழ்ந்த எதிர்காலம், வெறுப்பு மயமான பார்வை, மன அழுத்தங்களால் ஏற்பட்ட நிலை போரின் தாக்கங்களுக்காளான மாணவர்களால் பாடசாலைகளில் உயிர்த்துடிப்பைக் காண விளையும் கல்விச் சீர்திருத்தங்கள், புதிய முன்னெடுப்புக்கள் மாணவர்களைச் சென்றடையாதவாறு தடைக்கற்கள் குறுக்கே பரவி விடப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆசிரியர்கள் செயற்படமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். பெற்றோரது போதிய ஒத்துழைப் பின்மை, மாணவர்களது புறக் கணிப்பு, வழி நடாத்த முடியாத

ஆசிரியர்களின் கையாலாகாத் தனம் இவை இன்றைய இயல்பு நிலை ஆகி விட்டது ஆசிரியர்கள் தமது பணியில் தொடர்ச்சியான மன அழுத்தங்களுக்கு ஆளாகி யுள்ளனர். இந் நிலையில் மாணவர்களை உளநெருக் கீடுகளில் இருந்து விடுவித்து இயல்பான கற்றல் சூழலுக்கு உட்படுத்தும் நிலையில் ஆசிரி யர்கள் எவ்வாறு வெற்றி காண முடியும்? கற்பித்தற் கருத்துடன் ஒன்றிணையும் சூழ் நிலை தூர விலகிச் செல்கின்றது. கருத் தரங்குகள், சேவைக்காலப் பயிற்சிகள், கணிப்பீட்டு வேலை கள், தொடர்ந்து வழங்கப்படும் பல்வேறு வேலைப்பழுக்கள் ஆசிரியர்களை மன அழுத்தங் களுக்கு இட்டுச் செல்கிறது. ஆசிரியர்களே இயல்பு நிலையில் இருந்து தூரவிலகி நிற்கும் போது மாணவர்களைச் சூழலின் தாக் கங்களில் இருந்து விடுவித்து கற்றல் கருமங்களில் முழுமை யாக ஈடுபடுத்துவது எவ்வாறு சாத்தியமாகும்.

இந்நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டின் ஆசிரியர்கள் உளவளம் பேணும், ஆலோசனை வழங்கல் (சீர்மியம்) நுட்பங் களில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஆசிரியர் கல்வியில் இத்துறை தொடர்பான நடைமுறை அனுப வங்களை வழங்கும் வகையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆசிரியம் ஒரு வேலை வாய்ப்பாகவே இன்று கருத்திற் கொள்ளப்படுகின்றது. ஆசிரியப் பணிக்கு எத்தகையோர் வரினும் அவர்கள் கற்பித்தற் பணியுடன் ஒன்றிணையத்தக்க வகையில் ஆசிரியர் கல்வி வளமாக்கப்பட வேண்டும்.

## ஆலோசனை வழங்கலும் ஆசிரியமும்

இன்றைய மாணவர்கள் அசிரத்தை, மனச்சோர்வு, போர் உணர்வு, பதகளிப்பு, சமூக விரோத மனப்பாங்கு, போதை நாட்டம் போன்ற இழிநிலை களுக்கு ஆளாகியுள்ளனர். வன் முறை எண்ணங்களை எளிதா கப்பெற்றுக் கொள்கின்றனர்.காலச் சூழ்நிலைதான் இந்தஇழி நிலைக் குக் காரணம். ''மனிதன் பிறக்கும் போது நல்லவனாகவே பிறக்கி றான், சூழ்நிலை தான் அவனை கெடுத்து விடுகிறது. சூழ்நிலை யின் பிடியிலிருந்து விடுவிப்பதே கல்வி'' என்ற ரூசோவின் வார்த்

தைகளை நாம் இந்றைய சூழ்நிலையுடன் ரொபாருத்திப் பார்க்க வேண்டும். முதலில் சூழ் நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் திறன் ஆசிரியர்களிடத்தே ஏற்படுத்தப் படவேண்டும். அத்தகைய திறன் விருத்தி பெற்ற ஒருவரே தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவனின் சூழலின் பிடியில் இருந்து விடுவிக்க வழிகாட்ட முடியும்.

ஆசிரியர் கல்வி வதிவிடக் கற்கை நெறியாக இருப்பது மிக அவசியம். ஏனெனில் ஆசிரியர் தன்னைப் புதிய சூழலுக்குத் தயார்ப் படுத்தவும், மாசுபட்ட இன்றைய சூழலிருந்து தன்னை அன்னியப்படுத்தவும் ஆசிரியர் கல்வி வழி செய்ய வேண்டும். அத்தகைய வதிவிடக் கற்கையின் போது அனுபவத் தேர்ச்சி, ஆலோசனை வழங்கும் நடை முறை நுட்பம் வாய்ந்தவர்களே வழிகாட்டிகளாக ஏற்க வழிசெய்ய வேண்டும். இத்துறையில் ஈடுபடு வோர்: ஆலோசனை வழங்கல் கல்வி உலகைப் பொறுத்த மட்டில் மருத்துவ அறிவியலுடன் தான் முழுமையான தொடர்புடை யது என்ற எண்ணம் நீங்கப்பெற வேண்டும்.

சிக்மன் பிறைட் என்பவரது உளப்பகுப்பு கொள்கைப்படி மனிதன் இயல்பூக்கங்களால் வழிநடத்தப்படும்சமூக விலங் காவான். அவன் சமூகத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப மாற்றிக் கொள்ளும்தன்மை வாய்ந்தவன் அவ்வகையில் சூழ்நிலைக் கேற்ப மனிதன் மாய்ந்து கிடக்கிறான். ஆனால் பென்சமின் பிரங்கின் என்ற உளவியலாளர் சூழ் நிலையை வெற்றி கொள்ளும் ஆற்றல் மனிதனிடம் உள்ள உயர்ந்த குணம் என்றார். அந்தக் குணத்தை மேம்படுத்தும் திறன், தனது செயற்பாட்டினைத் தீர்மானிக்கும் சுதந்திரம் மனித னுக்கு உண்டு என்றார். இரண் டாம் உலக யுத்தகாலம் கொடூர மான நாஜி சிறச்சாலையின் மரணவாழ்வின் மத்தியில் பெற்ற அனுபவத்தை "லோகோதெறவி" என்ற சிகிச்சை முறையாக உலகிற்கு அளித்தார். மனிதன் கொடூரமான துயரங்களின் நடுவே சோர்ந்து அளிந்து போகாது, மனோதிடத்தைப் பெறும் ஒரு புதிய அனுபவத்திற்கு வழி காட்டி னார். ஆசிரியர் கல்வி அத்தகைய அனுபவம் ஒன்றினை ஆசிரியர் களுக்கு முழுமையாக அளிக்கும் வகையில் அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

அழிவுகளால் தொடரும் துன்பம் நிறைந்த எமது சமூகத்தை அழியாது சுடர்விடும் ஒரு நம்பிக்கையை ஒவ்வொரு மாணவனதும் உள்ளத்தில் தூண்டி விடும் தகைமையை ஆசிரியர் பெற வேண்டும். ஒரு ஆசிரியர் தனது வாழ்வை அர்த்த முள்ளது ஆக ஆக்கிக்கொள்ள வேண்டும். எந்தக் கொடூரத்தின் மத்தியிலும் தலைநிமிரும் மனவலிமை ஆசிரியர் பெற வேண்டும். சிதைவுகளின் நடுவேயும், மரண ஓலங்களின் மத்தியிலும், அச்ச உணர்வும் எதிர்காலக் காப்பின்மை பற்றித் துயருறும் மத்தியில் ஆசிரியப்பணி வெற்றிகரமானதாக வழிநடத்தப்பட பெஞ்சமின் பிரேங்கின் ஏற்படுத்திய சூழலின் நடுவே ஆசிரியராக நிறுத்தப்பட வேண்டும்.

## வதிவிடக் கற்கை நோக்கு

இன்றைய அவலமான சூழலிலிருந்து ஆசிரிய மாணவரை பிரித்து எடுத்து அன்னியப் படுத்தப்பட்ட ஒரு சூழலில் ஆசிரியர் கல்வி அழிக்கப்பட வேண்டும். தனது வீட்டுச் சூழலைத் துறப்பதில் ஒரு ஆசிரியனது அர்ப்பண வாழ்வு தொடங்க வேண்டும். ஒரு காலம் ஆசிரியப் பயிற்சி கட்டாயப் படுத்தப்பட்ட பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட்ட வதிவிடம் கல்வியாக இருந்தது. ஆரிய கலாசதலைகள் என்று வதிவிடக் கற்கை நெறியை கைவிட்டனவோ, அன்றே பகுதி நேர ஆசிரிய மனோபாவம் தலை தூக்கியது. ஆசிரியர் கல்வி முழுமையற்ற நிலைக்கு முற்றாகத் தள்ளப்பட்டது. ஆசிரியர் ஊதியத்திற்கான தொழில் என்ற எண்ணம் வளர்ந்தது. ஆசிரியப் பணி எழிதாகக் கிட்டும் என்ற எண்ணத்துடன் இப்பணிக்கு வருவோர் தொகை அதிகரித்து வருகின்றது. ஆகவே அவர்களையும் வரவேற்று எத்தகைய இடர்பாடான சமூகத்திலிருந்து தான் வருகிறேன் என்பதை நன்குணர்ந்து, அச்சமூகத்துக்கு தான் ஆசிரியன் என்ற வகையில் ஆற்ற வேண்டிய பொறுப்புணர் வான பங்களிப்பை உணர்ந்து கொள்ளும் வகையில் ஆசிரியர் கல்வி வளமாக்கப்பட வேண்டும்.

உளவியல், சமூகவியல், ஆலோசனை வழங்கல், தத்துவாய்வு எனற துறைகளினூடாகத் தனது கடமையை விழிப் புணர்வுடன் நோக்கத்தக்க நிலையை எய்த வேண்டும்.

ஆதி இந்துக் கல்வி மரபில் பன்னிரண்டு ஆண்டுகள் தனது குடும்பத்தை முற்றாகத் துறந்து பெற்ற கல்வியே பிரம்ம ஞானம் எனப் பட்டது. பிரம்மஞானம் என்பது தன்னையும், சமூகத் தையும்கடமையையும், தனக் கும்,சமூகத்துக்கும் இடையிலான தொடர்பையும் அறிந்து கொள் ளும் முழுமையான தகுதியாகும் முழுமையான ஆழுமை விருத்தி, சமநிலை ஆழுமை (Balance Personality) திறனாகும். இத்த கைய பண்டைய கல்வியின் பாங்கினை ஓர் அளவிலேனும் பெறத்தகுதி உடையது வதிவிடக் கற்கை ஒன்றே ஆகும். இதன் மூலம் தற்காலிகமாக மாசுபட்ட சமூகத்திலிருந்து விலகித் தனிமையான ஒரு புதிய சூழ லுக்கு உட்படுத்த முடியும். வதிவிடக் கற்கையை முகாமை செய்வோரும் வழிநடாத்துவோரும் அத்தகைய புதிய உளவியல் சார், சமூகம்சார் சூழலை உருவாக்கும் திறன் இருக்க வேண் டும். இங்கு தான் ஆசிரிய மாணவன் கற்கும் காலத்தின் பெரும் பொழுதைப் பயனுறுதி வாய்ந்த செயல்களில் ஈடுபட வாய்ப்புக்களைத் திட்டமிட்டு வழங்க வேண்டும். இங்கு சுயமாக ஒழுங்கமைக்கப்பட்ட நாளாந்த வேலைத்திட்ட மொன் றுக்குத் தன்னைத் தயார்ப்படுத்த பயிற்றுவிக்கப்படுகின்றான். நித்திரை விட்டெழுதல் முதல் மீண்டும் நித்திரைக்குச் செல்லல் வரை கிரமமான ஒழுங்கமைக் கப்பட்ட நேர அட்டவணைக் கருமம் ஒன்றில் அனுபவங்களைப் பெறத் தூண்டப்படுகின்றான் நேர் முறையான சமூக மயமாக்கல் இவ்வாறு தான் நிகழ முடியும் பல்வேறு சமூகப் பின்னணியி லிருந்து வருவோனும் பல்வேறு மனப்பாங்கினருடனம் கூடி வாழ் ந்து புதிய சமூக ஊடாட்டத் திற்கு ஈடுகொடுக்கும் திறனைக் கற்றுக் கொள்ள முடியும். சமூக மனவெ ழுச்சி தொடர்பான அனுபவற்களை இங்கு நிறையப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

ஏற்கனவே சமூகத்தில் பெற்ற மனவடு, சமூகக்கீறல்கள், தவறான பிற உணர்வு, நெறி கேடான சமூக எண்ணங்கள் இவற்றுக்கான பாரிகார அனுபவ ங்களை இங்கு தான் ஏற்படுத்திக் கொள்ள முடியும். சுயசிந்தனை, தனித்துவம், சமூகக் கட்டமைப்பு, சமூகப் புரிந்துணர்வு, சமூக அர்ப்பணம், ஒன்று பட்டு கரும மாற்றுதல் போன்ற பல்வேறு சமூக அனுபவங்களைத் திரட்டி

உள வளத்தினை உறுதி செய்ய முடியும்முழுமையான உளவியல் அனுபவங்களை வழங்கும் வாய்ப்புக்களை மையமாகக் கொண்ட தாகவே வதிவிடக் கற்க ஒழுங்க மைக்கப்பட வேண்டும். இரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதன் சூழ்நிலையை அங்கு ஏற்படுத்தித் தரவேண்டும். நெகிழ்ச்சியற்ற கட்டமைப்பு, மாணவர் மனதில் சுதந்திர எண்ணத்தை அறவே நீக்கும் செயலுணர்வுகளை நீக்கவேண் டும். மனித மன உணர்வுகளின் விளைநிலமாக இது அமைய வேண்டும் ஆசிரியர் என்பவர் ''யேசுகிறிஸ்துவைப் போன்ற இரக்க உணர்வுடையவராக இருக்க வேண்டும் என்று ரூசோ கூறியஎண்ணத்தை செயலாக்கும் உள வளம் அளிக்கப்பட வேண்டும். சிறிது சிறிதாக இரக்கமற்ற வைரித்த சமூக மொன்று விரைவாக இங்கு உருவாகி வரும் சூழ்நிலையை நன்கு அவதானிக்க முடிகின்றது இந்நிலையை எதிர்கொண்டு மனிதாபிமான உணர்வுகளின் அடிப்படையில் மாணவர்களை உருவாக்கும் சூழலை ஆசிரியர் மாணவர் மனதில் வேரூண்றச் செய்ய வேண்டும். ஆகவே ஆசிரியர் கல்வி என்பது பாடசாலைக்கு உளவளம் நிறைந்த ஆசிரிய மனித வளத்தை வளங்குவதையே குறியாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும் வறண்ட தரையில் நீர் சுரக்கச் செய்யும் முயற்சி போன்று மனித மனங்களில் மனித விழுமியங் களை, மனித நேயத்தை உருவாக்கும் திறனை வளர்ப்ப தாக இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் சராசரி மனிதர் என்ற நிலையிலிருந்து விடுபட வேண்டும். நமது நாட்டில் இத்த கையநிலைஐம்பது ஆண்டுக ளுக்கு முன்னர் நடைமுறையிலி ருந்தது. “Guru is not god, god is Guru'' ”ஆசிரியர் கடவுள் அல்ல கடவுளே ஆசிரியர்” என்ற வாசகம் இலட்சிய வாதம்சார்ந்த தல்ல. இதுஒரு அதீத எதிர்பார்ப்பு அல்ல. இன்றையசிக்கலடைந்த சமூகத் தை,அச்சிக்கலிலிருந்து மீட்பதற்கு வேண்டிய மீட்பர்களே ஆசிரியர் ஆகவேண்டும். எமது பிரதேசத்தில் இன்று பரவிக் காணப்படுவது உள நெருக்கீடும், மன அழுத்தம் நிறைந்ததுமான மனிதர்களே யாகும். ஆகவே இந்த நிலை மாற்றப்பட வேண்டுமானால் அது பாடசாலை ஊடாகவே சாதிக்க முடியும். உளப்பிணிச் சிகிச்சை நிலையங்களால் ஒரு

முழுமையான சமூகத்தை மீட்க முடியாது. உளவளம் நிறைந்த ஒரு பாடசாலையால் நல்லதோர் புதிய சமூகத்தை உருவாக்க முடியும். <u>இன்று ஒரு நல்ல பாடசாலை இல்லையேல் மூன்றுமனநோயாளர் விடுதியைத் திறக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரிக்க வேண்டியுள்ளது.</u> ஆகவே இருக்கின்ற பாடசாலைகள், ஆசிரிய கல்வி நிறுவனங்கள் மனநோயாளிகளை உருவாக்கும் செயல்களிநின்றும் தூர விலக்குவதுடன், உளவளம் நிறைந்த சமூகம் ஒன்றினை உருவாக்கப் பங்களிப்பு செய்வது பற்றிச் சிந்திக்க வேண்டும்: செயற்பட வேண்டும்.

The tirist principal in education is that the child shall work under guidance in to tead of under compusion

-M..K.Aohly

| காலம் | நிகழ்வுகள் |
|---|---|
| 1. கி .மு 35,000 -15, | - குகைஓவியங்கள், உருவங்களை குகைகளில் செதுக்குதல். |
| 2. கி .மு15,000-10,000 | - பேச்சு மொழி ஆரம்பநிலை. |
| 3. கி .மு 5,000 - 2,500 | - சித்திர வடிவ எழுத்துக்கள், கழிமண் பதிவுகள். |
| 4. 2,500 - கிறிஸ்து பின்பு | - ஏதேன்சு, உரோம நூலகங்கள் உருவானமை. |
| 5. கி .பி 1000 | - சீனாவில் காகிதப் பதிவுகள் ஆரம்பம். |
| 6. கி .பி 2000 | - காகிதங்கள் அற்ற கணணிப் பொறி யுகம் |

# நல்லாசிரியர் இதய ஒலி

பிள்ளைகளே!

அழியாக் கல்வியை நாம் தருவோம்
விழியாய் அதனை வளர்ப்பீர் நீர்,
அழகிய உலகம் உமதேயாம்
மழலைகள் கொஞ்சும் மஞ்சரியாம்,
காலங்கள் தோறும் எம் கரம் பிடிப்பீர்
.................................... ............. (அழியாக்)

பள்ளி உங்கள் இல்லம் அன்றோ
துள்ளல் மட்டும் போதா துணர்வீர்.
தாயும் நாமே தந்தையும் நாமே
ஓயாது கற்றுக் கலைகளில் தேர்வீர்.

கலைகளை நாம் உவந்து பயில்வோம்
விலைமிகு விழியாய் உங்களைக் காப்போம்.
அன்பும் பரிவும் அளவின்றி அளிப்போம்
துன்பம் நேரிடின் தளர்ந்திட விடோம்.
உங்கள் பாதையை இரசனையோடு தொடங்குவோம்
என்றும் நிறுத்தோம் அறிவால் நிரப்புவோம்.

இறுதி வரை துணிந்து முன்னோக்கிச் செல்வீரே
உறுதி பூண்டு தளராது கருமம் ஆற்றுவீரே.
ஈற்றினில் வெற்றியை ஈட்டுவீர் மக்காள்
கற்றலின் போற்றினை நாட்டுவோம் இத்தால்.
நன்றென எம்முடன் நீவீர் மகிழ்வீர்
வென்றவர் நாமென மானிடர் இயம்புவர்.

# நன்மாணக்கர் கூற்று

அன்புக்குரிய ஆசிரியராம் தாயாரே
அன்புக்குரிய ஆசிரியராம் தந்தையாரே!
அன்புத் தந்தை போன்ற ஆசிரியரே
துன்பம் போக்கும் தாயார் போன்றவரே!
முத்தமிழ் வித்தையை நாங்கள் கற்கையில்
நித்தமும் உத்தமர் நீங்களெம் பெற்றோரே!

அன்புக்குரிய ஆசிரியராம் தாயாரே
அன்புக்குரிய ஆசிரியராம் தந்தையாரே,
எனது எண்ணங்களை அறிந்த வல்லவரே
மனம் புண்படாது போதித்த நல்லவரே,
ஆசான் நீங்கள் என்றுமென் வளமாகும்
பாசம் இங்கே வெற்றிக்கு வழியாகும்.

உங்கள் நன்றான அறிவுகள் ஒயியூட்டும்
திங்கள் போன்ற அறிவுரைகைள் தெளிவூட்டும்,
என்னாசான் சென்ற பாதை அரிதன்றோ
பொன்னானவர் வென்ற வாகை பெரிதன்றோ.

அப்பாதை தடைப்படின் தளரேன் செல்வேன்
தப்பாமல் துடிப்புடன் எழுவேன் வெல்வேன்
உங்கள் நிழலின் தன்மையை உணர்கிறேன்
தங்கமாம் காலில் ஆறுதல் காண்கிறேன்.

பாட்டுப்பாடும் குருவி போன்று சுதந்திரமாய்
வேட்டையாடும் சிங்கம் போன்று வீரனுமாய்,
அம்போடும் முயல் போன்று அப்பாவியாய்
தும்பிக்கையான் யானை போல் அறிவாளியாய்,
ஐயமில்லை பயமும் இல்லை என்னில்
வெய்யிலில் நிழல் போல நீங்கள்,
விழுந்து விடினும் நான் மீண்டும்
எழுந்திட உங்கள் துணை வேண்டும்,
ஆசானே உங்கள் கட்டளையென் கடமை
ஆசியே தாங்கள் அளித்திடுத் உடமை.

# மனத்தகைப்பு (Stress)

திரு.எஸ்.செந்தில்மணி
சிரேஸ்ட விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

உலகில் மக்கள் இன்று பல் வேறு அழுத்தங்களின் மத்தியில் வாழ்கிறார்கள். நிழலைப் போன்று அழுத்தங்கள் மனிதனைத் தொடர்ந்து செல்கின்றது. வீடு, வீதி, வேலைத்தலம் எனப்பல் வேறு இடங்களில் வகை வகை யான அழுத்தங்கள் மனித னைத்தாக்குகின்றன. போர்க் காலச் சூழ்நிலை நிலவும் பொழுது அழுத்தங்கள் பல மடங் காகிறது. நோயாளரின் வரவு வைத்தியசாலையில் அதிகரிக்கிறது.

உலோகங்களில் விசை தாக்கும் பொழுது மனதகைப்பு ஏற்படுகிறது. உலோகங்களின் தன்மை, விசை என்பதற்கேற்ப தகைப்பைத் தாங்கும் சக்தி அவ்ற்றிற்குண்டு. அதேபோல் மனிதனும் உடல்நிலை, அழுத் தங்களுக்கு ஏற்ப மனத்தகைப் பை தாங்கும் சக்தி அவனுக்கு உண்டு. எல்லை மீறினால் சில உலோகங்கள் உடைவதுபோல மனிதனும் நோயுற்று மரணத்தைத் தழுவுகின்றான்.

அழுத்தங்கள் மனிதனைத் தாக்கும் பொழுது எதிரான மனவெழுச்சி, அச்சம், கோபம் என்பவற்றை உண்டாக் குகின்றது. இங்கு மனவெழுச்சி என்பது உளவியல் மாற்றத்தால் உடலில் ஏற்படும் பிரதிபலிப் பாகும். இவை பல்வேறு உடலியல் சுரப்பிகளையும் நரம்புகளையும் அசாதாரண நிலைக்கு கொண்டுவருகிறது. உடலின் சமநிலை குழம்புகிறது. இதை எதிர்க்கும் சக்தி உடல் நிலைக்கு இல்லையேல் நோய்கள் பீடித்துக் கொள்கின்றன. அதாவது தகைப்பானது தனியான உடல் நோய் அல்ல. அது பலவித நோய்களை உண் டாக்கும் உந்து சக்தியாக விளங்குகிறது. இவற்றை ஆராயுமுகமாக கட்டுரை விரிவடைகிறது. ஒருவரின் சுழலில் இருந்து ஏற்படும் அழுத்தமானது அவரது உடம்பையும் உள்ளத்தையும் பாதிப்பது தகைப்பு எனப்படும். மனத்தகைப்பு ஏற்படு வதற்கான துலங்கல்படிமுறைகள் கான்ஸ்செயில் இதனை வகுத்த

வர் ஆவார். இவர் இதனை மூன்று படிகளாக வகுத்துள்ளார்.

(1) எச்சரிக்கைத் தாக்கம்
(2) தடுத்தல்
(3) களைப்பு

### எச்சரிக்கைத் தாக்கம்.

முதல் படிமுறையாக பயம், கோபம் போன்ற மன-வெழுச்சிகள் உடலில் தாக்கம் ஏற்படுத்தல்.

### தடுத்தல்.

மனவெழுச்சிகளை உடல் எதிர்கொள்வதற்காக நரம்புத் தொகுதியின் செயற்பாடு, இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, குருதி வெல்ல அளவு அதிகரிக்கும். உணவுச் சமிபாடு மந்தமடையும். இப்பொழுது இரண்டாவது படிமுறையான தடுத்தல் நிலையை அடைகிறது.

### களைப்பு.

இப்பொழுது உடலானது தகைப்பை வெல்ல வேண்டும். அல்லது தப்பவேண்டும். இவ் முயற்சி வெற்றி பெறுமாயின் உடல் சாதாரண நிலையை அடையும். அப்படியில்லை எனில் நீண்டகாலதகைப்பின் காரணமாக களைப்பு அடையும். இதனால் உடலும்உள்ளமும் பாதிக்கப்பட்டு சிலசமயத்தில் மரணத்தில் முடிவடையும்.

### தகைப்பும்உடல் நோய்களும்.

முற்றிய மனவெழுச்சி இறுக்கத்தால் (தகைப்பு) தூண்டப் பட்ட உறுப்புக்குரிய மாற்றங்-களிலிருந்து உள்ளுறுப்பு நோய்-கள் உண்டாகின்றன. இவை உளவழியாகத் தோன்றும் நோய்கள் ஆகும்.

c -ம் :(1) குடற்புண்
(2) இருதய நோய்கள்
(3) மாரடைப்பு
(4) உயர்இரத்த அழுத்தம்
(5) நரம்புத் தளர்ச்சி
(6) அஸ்மா
(7) பக்கவாதம்

இவற்றில் விசேடமாக குடற்புண் மருத்துவத்துறைக்கும் உள்ள பொதுவான நிலையாகும். உடல்கூற்று நோக்கில் பார்க்கும் பொழுது வயிற்றில் இரப்பையைச் சார்ந்தசாறு சிறுகுடலைச் சார்ந்த இழைய மூலத்தில் (tissue) விழும் பொழுது அந்த நடவடிக்கையை அவை தாங்கிக் கொள்ளத் தவறுவதால் இந்நோய் உண்டாகிறது. இச்சாறு அதிகமாகச் சுரப்பதற்கு தவிர மனத்தகைப்பே காரணம் என உளவியலாளர்கள் கருதுகிறார்கள்.

## அமெரிக்க தேசிய சுகாதார ஆராய்வு மத்திய நிலையத்தின் புள்ளி விபர அறிக்கை.

இவ் நிறுவனம் குடற் புண்ணால் பாதிக்கப்பட்டவர்களை ஆராய்ந்து பின்வரும் தகவல்களை வெளியிட்டுள்ளது.

(1) 20 மனிதர்களில் ஒருவருக்கு அவர்களின் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் குடற்புண் தோன்றுகிறது.

(2)ஒவ்வொரு வருடமும்அமெரிக்காவில் குடற்புண்ணால் இறப்பவர் அண்ணளவாக 10,000 என மதிக்கப்பட்டுள்ளது.

(3) இது வியாபாரி தொடக்கம் வைத்தியர் வரை எல்லா மட்டங்களிலும் காணப்பகிறது.

(4)அமெரிக்காவில் உள்ள வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளாகள் மத்தியில் (Air Traffic Controllers) இந்நோய் மிகக் கூடிய அளவு காணப்பட்டது. 3 பங்கினர் இவ் நோயால் பாதிக்கப்பட்டனர். பலர் இவ் வேலையை விட்டு வைத்தியசாலையை நாடினர்.

வான்போக்குவரத்து கட்டுப்பாட்டாளருக்கு இந் நோய் கூடுதலாக இருப்பதற்கான காரணம் ஆராயப்பட்டது. இதற்கான காரணம் தொடர்ச்சியான விழிப்புணர்வும் விபத்து எப்பொழுதும் நடை பெறுமோ என்று தெரியாத நிச்சயமற்ற தன்மையும் கொண்ட அழுத்தங்களில் மத்தியில் இவ் வகையைச்சார்ந்தவர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் எத்தனை அவதானத்துடன் இருந்தாலும் அங்கு விபத்து நடை பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. இப்படியான சூழ்நிலையால் இவர்கள் தகைப்பிற்கு உட்படுகிறார்கள்.

## உளவியலாளர் பிராடியின் (Brady) பரிசோதனை.

இவர் ஒரு கூட்டை இரண்டாகப் பிரித்து ஒன்றினுள் பரிசோதனைக்குரிய குரங்கையும் மற்றையதில் கட்டுப்பாட்டுக்குரிய குரங்கையையும் அடைத்தார். பிரிக்கப்பட்ட இரு பகுதியிலும் ஒவ்வொரு நெம்புகோல் உள்ளன.இவ்வாறாக பல சோடிகள் வைக்கப்பட்டன. இரு பகுதினகளுக்கும் ஒரே மின்னதிர்ச்சி கொடுக்கும் பொழுது பரிசோதனைக்குரிய பகுதியிலுள்ள நெம்புகோலை மட்டும் அழுத்துவதாலேயே இரு பகுதிக்குரிய மின்னதிர்ச்சியைத்

தடுக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மின்னதிர்ச்சி கொடுத்த பொழுது முயன்று தவறல் மூலம் பரிசோதனைக்குரங்கு தனது நெம்புகோலை அழுத்தி மின்னதிர்ச்சியை நிறுத்தக்கற்றக் கொண்டு தொடர்ந்து வந்த மின்னதிர்ச்சிகளை தடுத்து நிறுத்தியது. இவ்வாறாக நாளொன்றுக்கு 6 மணித்தியாலம் மின்னதிர்ச்சி கொடுக்கப்பட்டது.

சில நாட்களின் பின்னர் குரங்குகளை ஆராய்ந்த பொழுது பரிசோதனைக் குரங்குகள் கடும் சுகயீனம் உற்றுள்ளதையும், ஒரு சில இறக்கும் தறுவாயில் இருப்பதும் காணப்பட்டது. கட்டுப்பாட்டுக் குரங்குகள் சிறிய பாதிப்புக்கு உள்ளாயிருந்தன.

பரிசோதனைக் குரல்குகள் மின்னதிர்ச்சி ஏற்படும் கணத்தில் நெம்புகோலை அழுத்தி உடன் நிறுத்துவதற்காக எப்போழுதும் தொடர்ச்சியான விழிப்புணர்வும், ஆபத்திலிருந்து தப்புலோபோ என்ற நிச்சயமற்ற தன்மையும் இருந்தால் கூடியளவு தகைப்புக்கு உள்ளாகியதை உளவியலாளர் கண்டுபிடித்தனர்.

முடிவு:

தொடர்ச்சியான விழிப்புணர்வும் நிச்சயமற்ற தன்மையும் மனத்தகைப்புக்கு காரணமாக அமைகின்றன.

உ-ம்: போர்க்காலச் சூழ்நிலையில் ஆரம்பிக்கும் ஓசை எழுப்பாமல் திடீர் திடீர் என வந்து விழும் எறிகணையில் இருந்து தப்புவதற்கு தொடர்ச்சியான விழிப்புணர்வும் நிச்சயமற்ற தன்மையும் கொண்டு பதுங்கு குழியில் பாயும் நிலை ஏற்படும் பொழுது தகைப்பு மனிதனைத் தாக்குகிறது.

## ஜேவெயின் (Jay weiss) பரிசோதனை.

வெயின் என்பவர் எலிகளைக் கொண்டு இப்பரி சோதனையைச் செய்தார். முன்பு போல் ஒன்று பரிசோதனை எலியாகவும் மற்றையது கட்டுப்- பாட்டு எலியாகவும் வைக் கப்பட்டது. இங்கு மின்னதிர்ச்சி கொடுக்கும் பொழுது பரிசோ தனை இருக்கும் பகுதிக்குள் உள்ள துவாரத்தினுள் உள்ள உலோகத் தகட்டைத் தொடுவதன் மூலம்

இரு பகுதிக்கான மின்னதிர்ச்சியை எலி நிறுத்தும்.

ஆனால் இப்பரிசோதனையில் சிறு மாற்றம் உள்ளது. அதாவது மின்னதிர்ச்சி கொடுக்க முன்னர் ''பீப்'' என்ற எச்சரிக்கை ஒளி எழுப்பப்படும். இவ்வாறு மின்னதிர்ச்சிகள் இடைவிட்டுக் கொடுக்கப்பட்டன. இரண்டு நாட்களின் பின்னர் எலிகளின் குடல்கள் அறுவை செய்வதன் மூலம் ஆராயப்பட்டன. பரிசோதனை எலியின் குடலில் 1.5mm அளவு குடல்ப்புண்ணும் கட்டுப்பாட்டு எலியில் 4.6mm அளவு குடல்புண் பாதிப்பும் காணப்பட்டது. இதுமுதலாவது பரிசோதனை முடிவுக்கு எதிராக இருப்பது போல் தோன்றும் ஆனால் அப்படியல்ல.

''பீப்'' என்ற எச்சரிக்கை ஒலி எழுப்பப்படுவதால் தொடர்ச்சியான விழிப்புணர்வும் நிச்சயமற்றதன்னையும் குறைவடைகின்றது. ஆபத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய தன்மையுடன் பரிசோதனை எலி உள்ளது. இதனால் பரிசோதனை எலி தகைப்பால் பெரிதும் பாதிக்கப்படவில்லை.

முடிவு:- தகைப்பை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் கூட அதைக் கட்டுப்படுத்தக் கூடியதாக அமைந்தால் குறைந்த தகைப்பைக் கொடுக்கும்.

உ-ம்:- (1) முன்பு யாழ் கோட்டையில் இருந்து திடீர் திடீர் என்று நகரப்பகுதியில் வீழ்ந்து வெடிக்கும் எறிகணையால் மக்கள் கடைத்தெருவுக்குப் போக அஞ்சினர். ஆனால் பின்பு எறிகணை வரும் முன்னர் எச்சரிக்கை ''சயிரன்'' ஒலி எழுப்ப ஒழுங்கு செய்யப்பட்டது. மக்களின் அச்சம் குறைந்தது.

(2) வட்டமிட்டு குண்டு போடும் விமானம் எறிகணையை விட குறைந்தளவு தகைப்பைக் கொடுக்கும்.

## (Jay weiss) ஜேவெயிஸ் பரிசோதனை 2

இவரின் இரண்டாம் பரிசோதனை எலிகளை இரு கூட்டங்களாகப் பிரித்து ஒரு கூட்டத்திற்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டதும் மின்னதிர்ச்சியைக் கொடுத்தார். மற்றைய கூட்ட எலிகளுக்கு எச்சரிக்கை ஒலி கொடுக்காமல் மின்னதிர்ச்சி கொடுக்கப்பட்டது. இருகூட்டங்களுக்கும் மின்னதிர்ச்சியை நிறுத்தும் வழிகள் செய்யப்படவில்லை.

இவ்வாறு மின்னதிர்சிகள் விட்டு விட்டு இருநாட்கள் கொடுக்கப்பட்டது. இரண்டு நாட்களின் பின்னர் இவை பரிசோதிக்கப்பட்டன. எச்சரிக்கை ஒலி கொடுக்கப்பட்டவை குறைவாகவும் எச்சரிக்கை ஒலி கொடுக்கப்படாதவை கூடுதலாகவும் பாதிக்கப்பட்டிருந்தன.

முடிவு:- தகைப்பைக் கொடுக்கக் கூடிய சம்பவங்கள்கூட அவற்றை கட்டுப்படுத்த முடியாது அவை எப்பொழுது நடக்கும் என்று தெரிந்தால் அவை குறைந்தளவு தகைப்பைக் கொடுக்கும்.

உ-ம்:- நாம் அன்பு வைத்த ஒருவரின் எதிர்பாராத மரணம் எதிர்பார்த்த மரணத்தை விட கூடிய அளவு தாக்கத்தை கொடுக்கும்.

## தோமஸ் கோம்ஸ், மசூடா ஆகியோரின் ஆய்வு

இவர்கள் 5000 நோயாளர்களை பேட்டி கண்டு அவர்களைப் பாதித்த வாழ்க் கைத் துயர சம்பவங்களை கண்டறிந்தார்கள். அவற்றிலிருந்து அதிக நோய்களை உண்டாக்கும் துயரச்சம்பவங்களை இங்கு வரிசைப்படுத்தினார்.

1.வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவி இறப்பு
2.விவாகரத்து
3.நெருங்கிய குடும்ப அங்கத்தவர் இறப்பு.
4.சிறைவாசம்
5.நீடித்தநோய், மாறாதகாயம்
6.விவாகம்
7.வேலையை இழத்தல்
8.வேலையில் இருந்து ஓய்வு பெறல்.

எமது பிரதேசத்தில் நோய்க்கான முதன்மையான காரணியாக போர்க்காலச் சூழ்நிலை விளங்குகின்றது. போரினால் மக்கள் இடம் பெயர்ந்த பின்னர் அவர்களுள் ஏற்படும் திடீர் மரணங்கள், திடீர் நோய்கள், இளமையில் முதியோர் தோற்றம் என்பன எழுதாத புள்ளி விபரங்களாக மறைந்து விடுகின்றன.

## மாணவர்கள் மனத்தகைப்பு அடையாமல் இருக்க ஆசிரியர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.

1.தகைப்புக்கு அடிப்படையான மனவெழுச்சி இருப்பதால் மாணவரின் எதிரான மனவெழுச்சிகளை கட்டுப்படுத்த பயிற்சி அளித்தல்.

2.பாடசாலையில் மாணவர்களுக்கு பாதுகாப்பு உணர்வுகள் உண்டாக்க்கூடிய சூழலை அமைத்தல்.
3.குடும்ப அங்கத்தவர்களை இழக்கும் மாணவரிடம் அனுதாபத்துடன் அன்பும் ஆதரவும் காட்டல்.
4.படுகாயத்தாலோ, தீராத நோயினாலோ பீடிக்கப்பட்டிருக்கும் மாணவர் மனம் தளராது இருக்க உற்சாகம் காட்டல்.
5.கல்வியிலும் விளையாட்டிலும் ஏற்படும் போட்டிகளால் மாணவர்கள் மனமுடையாது இருக்க வழி செய்தல்.
6.மாணவருக்கு தண்டனை வழங்கும் முறையை இயன்றளவு குறைத்தல்.
7.பரீட்சை முடிவுகளை உரிய நேரத்தில் வெளியிடுதல்.

## மொழியும் எழுத்தும்

மொழி மனிதனின் மிகப்பெரிய சாதனை எனக்கொண்டால் அவனது மிகப்பெரிய கண்டு பிடிப்பாக அமைவது எழுத்தாகும். எழுத்தின் கண்டுபிடிப்பு சக்கரத்தின் கண்டு பிடிப்பிலும் உயர்வானது. இந்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பூச்சியத்திலும் பார்க்கமேலானது. தொலைபேசி, சலனப்படம், ஏன் கணனிகள் கண்டுபிடிப்புக்களை விட உயர்வானது. காரணம் மனிதனின் சுவடுகளாக இருந்து அவனது நினைவுகளை எழுத்துக்கள் வெளிப்படுத்தின. மனிதனின் மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பாடல் செயற்பாடுகளை அறுத்தெறிந்து எழுத்தானது காலத்தை வென்று மொழிக்கு உயிர்ப்பூட்டி மனித வாழ்வை நிலைபேறடையச் செய்கின்றது.

# தேசிய கல்வியற் கல்லூரிகளின் முன் - சேவை ஆசிரிய பயில்வின் இலக்குகள்.

K.தருமன்

- ஆசிரியராக வரவுள்ளவரை நம்பிக்கையுடன்கூடிய ஒரு தொழில் வாண்மையாளராக விருத்தி செய்வது எவ்வாறு?
- அவர் பெறவேண்டிய கற்றல் - கற்பித்தல் தேர்ச்சிகள் எவை?
- தமதாக்கிக் கொண்டு விருத்தி செய்யப்பட வேண்டிய திறன்கள் எவை?
- எவ்வாறு கற்றல்-கற்பித்தல் சவால்களை இனம் கண்டு தடைகளைத் தகர்க்கலாம்?

## நோக்கக் கூற்று:

மாணவர்களைக் கற்கத் தூண்டுவதற்குப் பொறுப்பாகவும், காரணம் காட்டக் கூடியவர்களாகவும் இருக்கும் ஆசிரியர்களை கல்வியற் கல்லூரிகளின் சேவைமுன் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் விருத்தி செய்யும். இதை நோக்கமாகக் கொண்டு, ஆசிரிய கல்வியலாளர்களும், ஆசிரிய மாணவர்களும் ஒருங்கு சேர்ந்து கல்விப் பிரச்சனைகளை பகுத்தாய்வு செய்து, தீர்வுகளைக் காணுவர். இந்த அறை கூவல் காரணமாக ஆசிரிய மாணவர்கள் பயனுறுதி வாய்ந்த கற்பித்தல் உத்திகளைக் கையாண்டு கற்பிப்பதுடன் இன்றைய கல்விக் கோட்பாடுகள் யதார்த்தமான கற்றல் கற்பித்தல் நிலமைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பதையும் உறுதிப்படுத்தும் ஆக்கச் செயல்களில் ஈடுபடுவர். இந்நிகழ்ச்சித் திட்டங்களின் கூறுகளுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம்: கற்பித்தல் ஆளணியினர், அதிபர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள், ஆசிரிய மாணவர்கள் என்போர் கூடிப் பணியாற்றுவதன் மூலம் ஒருங்கிணைப்பான அபிவிருத்தியை இவ் முன் சேவை ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் பிரதிபலிக்கும்.

இவ்வகையில் சுல்மான் (Schulman - 1992) என்ற கல்வியியல் பேரறிஞர் ஆசிரியர் கல்வி விருத்திக்கு மிக முக்கியமான நான்கு விடயங்களைப் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார்.

1. ஆசிரிய மாணவர்களின் கள அனுபவம்மற்றும் மாணவர்களுக் குக் கற்பித்தல் மூலம் ஏற்படும் - **செயன்முறை அனுபவம்.**
2. கற்பித்தல் - கற்றல் தொடர்பான கருத்துக்கள் மைய விடயங்கள் போதனைகளை உள்ளடக்கிய - **கல்வியியல் கோட்பாட்டு எண்ணக்கருக்கள்.**
3. செயற்திட்டங்கள், செயற்பாட்டு ஆய்வுகள், ஆய்வுகள் அபிவிருத்திகள் மூலம் கிடைக்கும் **அனுபவத்தகவல்.**
4. சிறந்த மற்றும் மோசமான ஆசிரியர்கள் கருமமாற்றியுள்ள விதம் தொடர்பான தகவல்கள், விடயங்கள், பின்பற்றல்கள், - **விடய ஞானம்.**

இவற்றின் கூட்டு மொத்தப் பெருகையாக ஆசிரியர் முன் சேவை கல்வியின் இலக்குகள் அமையும். எல்லோரும் எப் போதிலும் வெற்றிகரமாக உபயோ கிக்கக் கூடிய கற்பித்தல் தொடர் பான ஒரு உத்தி கிடையாது. ஆசிரிய பயிலுனர்களும், ஆசிரியர் களும் தாம் பெற்ற அனுபவங்-களையும் திறன்களையும் பயன்படுத்துவதனூடாகக் கற்றல் கற்பித்தல் உத்திகளை உருவாக்-கிக் கொள்ளமுடியும். தேசிய கல்வியற் கல்லூரிகளின் ஆசிரியர் கல்வியின் இலக்குகளாக அமைவது: ஆசிரியராக வர எத்தனிக்கும் பயிலுனர்களுக்கு வகுப்பறையில் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை வழங்குவது மட்டுமல்ல. அவர் அப்பிரச்சனையைத் தீர்க்கும் போது கூர்மையான ஒரு வகிபாகத்தில் ஈடுபடுவதற்கான வழிகாட்டலை வழங்குவதாகவே இருக்கும். இதன் படி தொழில் சார் பரப்பின் பணி ஆசிரிய பயிலுனர்களுக்கு பல்வேறு பிரச்சனைகளைத் தீர்க்கும் உத்தி முறைகளை விருத்தி செய்த-லாகும். அதற்கான வழிகாட்டல் பின்வருமாறு.

ஆசிரிய பயிலுனர்கள் அவரவர் பாடங்களை விளங்கு வதற்கு மேலதிகமாக ஒவ்வொரு மாணவனதும் சமூக - உளவியல் காரணிகள் பற்றிய அறிவும், மாணவன் எவ்வாறு கற்றலில் ஈடுபடுகிறான் என்பது பற்றியும், அதற்குரிய மிகப் பொருத்தமான கற்பித்தல் முறை எது என்பது பற்றியும், தெரிந்திருக்க வேண்டும். இவ் அகப்பார்வையை அடிப்படை யாகக் கொண்டு ஆசிரிய தொழில் வாண்மைச் செயற்பாடுகள், தர்க்கவியலின் பாவனை, சாட்சிகளைத் தேடுதல், பிரச்சினை

தீர்க்கும் உபாயங்கள், பாடசாலைக் கலைத்திட்டத்தை அன்றாட செயற்பாடுகளுடன் தொடர்பு படுத்தல் என்ற வகையில் விரிவடையும். மேலும் கல்வியற் கோட்பாட்டுத் தத்துவ அடிப்படைகளைத் தொடர்ந்து விசாரணைக் குட்படுத்தி வகுப்பறை மற்றும் பாடசாலை நோக்கத்திற்காக அவற்றைப் பயன்படுத்தும் திறனையும் தொழில் வாண்மைப் பாடங்கள் வழங்கும். கல்வியற் கல்லூரிகளின் ஆசிரியர் முன் சேவைக் கல்வி ஆசிரிய பயிலுனர்களை மையமாகக் கொண்டது. இதன்படி

- ✡ கற்றல் செயற்பாடுகளின் போது ஆசிரியமாணவனின் வினைத் திறனுடன் பங்குபற்றல்.
- ✡ஆசிரிய மாணவர்கள் சுய கற்றல் பற்றிய பொறுப்பை ஏற்றலும் கற்கக் - கற்றல் தேர்ச்சியை அதாவது எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கற்கும் தேர்ச்சிகளைப் பெறல்.
- ✡ ஆசிரிய கல்வியலாளர் ஒரு ஆலோசகராக, வழிகாட்டியாக இருந்து நெகிழ்ச்சியான நேர அட்டவணைகள் ஊடாகப் பல்வேறு செயற்திட்டங்களில் ஆய்வுகளில் ஆசிரிய மாணவர்களை ஈடுபடுத்தல். முக்கியமாக ஆசிரிய கல்வியலாளர் ஆசிரிய மாணவர்களின் ஆசிரியத்துவ தொழில்சார் விருத்தியின் அர்ப்பணிப்புகளுக்கு எடுத்துக் காட்டுகளாகச் செயற்பட்டு பாடசாலைக்களங்களில் சிறந்த கற்பித்தல் பயிற்சியைப் பெற வழிசமைப்பர்.

## சமூகவுறவு:

ஆசிரியத்துவம், கற்றல், கற்பித்தல் செயன்முறைகள் அனைத்திற்கும் ஆதாரம் சமூகமே யாகும். பாடசாலைகளுடனும் சமூகத்துடனும் உயிர்த்துடிப்பான தொடர்புகள் - உறவுகள் - இடைவினைகள் ஆசிரியப் பயில்வை வினைத்திறனாக்கும்.

- ✡சமூகத்திலும் பாடசாலையிலும் உள்ளபிரச்சனைகள், சிக்கல்கள், கற்றல் தேவைகள் பற்றிக் கவனம் செலுத்துதல்.
- ✡சமூக வளங்களைப் பயன் படுத்துதல்.
- ✡ சமூகத்திற்குப் பல்வேறு சிரமதான செயற்திட்டங்கள் மூலம் பங்களிப்பை மேற்கொண்டு தொடர்புகளைக் கட்டியெழுப்பலினூடாக ஆசிரிய கல்விக்கு அர்த்தம் காட்டப்படும்.

## மாணவர் பல்லினத்தன்மைகள்.

ஆசிரியப் பயிலுனர்கள் கற்கும் மாணவர்களின் பல்லினத் தன்மைகளை அறிய:

1. ஒரு மாணவனின் கற்றல் சிரமங்களை இனம் காணும் ஆற்றல்.
2. மாணவர் கற்றலில் ஈடுபடுத்தும் விதத்தைப் பொறுத்து அவர்களிடையே வேறுபாடுகள் உள்ளமை பற்றிய விளக்கம், விருப்பு வெறுப்புக்களை அறிதல்.
3. மாணவர்களின் பல்லினத் தன்மைகளை சவால்களாக ஏற்றுக் கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கும் ஆற்றல்.
4. ஒரு மாணவனின் கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்தும் சமூக-பொருளாதார- கலாசார- விழுமிய, உடலியல் மன எழுச்சிக் காரணிகளை இனம் காணும் விளக்கம்.
5. உரிய கற்பித்தல் முறையைத் தெரிந்து கொள்வதற்காக மாணவர்களின் குறைபாடுகளைப் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல்.

என்பவற்றினூடு கற்பிக்கும் மொழி மூலத்தைப் பயனுள்ள விதத்தில் கையாண்டு, தெளிவான குறிக்கோள்கள், பொருத்தமான கற்பித்தல் முறைகள், உத்திகள், கணிப்பீட்டு முறைகளைத் திட்டமிடும் ஆற்றலையும் ஆசிரிய மாணவர்கள் பெற வழிகளை அமைத்துக் கொடுப்பதும் ஆசிரியப்பயில்வு இலக்குகளாக உள்ளன. பின்வரும் மாணவர் மையக்கற்றல் முறைகளான: குழு வேலை, கண்டறிதல், எண்ணக் கருப்படம், விடய ஆய்வு, சுயாதீனக் கற்கை செயற்திட்டம், பிரச்சனை தீர்த்தல் என்பவற்றினூடாகப் பயனுள்ள வகையில் பாட முன்வைப்புக்களை மாணவர் விரும்பும் விதத்தில் தயார் செய்தல் உபகரணங்களையும், கருவிகளையும் உரிய முறையில் பயன்படுத்தும் கல்வித் தொழில் நுட்ப அறிவை மேம்பாடடையச் செய்தல்.

வகுப்பறை முகாமைத்துவ நுட்பங்களையும், வகுப்பறைக் கருமங்களையும் திட்டமிடல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தி வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல் பாடங்களுக்கிடையிலும், சமூகத்துடனும், மாணவர்களின் சகபாடிகள், பெற்றார் ஏனையவர்களுடனான தொடர்புகளை மேம்படுத்திவகுப்பறைகளுக்குவெளியே

கல்வியியல் ஆய்வுகளைச் செய்யும் ஆற்றல் பெறல். இவற்றுடன் இலங்கையின் கல்விக் கட்டமைப்பு, ஆசிரியபணி தொடர் பான சட்டங்கள், கோப்புக்கள், தேசிய கல்வி முறை பற்றிய விளக்கம், உலக ஆசிரியர் கல்விச் செல் நெறிகள் பற்றிய அறிவும், பல்திறன் தேர்ச்சிகளும் பெற வழி வகுக்கப்படும்.

## புதிய ஆசிரியர்களின் மனப்பாங்குகள்.

1. எல்லா மாணவர்களாலும் கற்க முடியும் என்ற நம்பிக்கை யையும் மாணவர் குறித்த ஒரு நெருக்கமான மனப்பாங்கையும் பெறல்.
2. கல்வி பற்றிய ஒரு தனிப்பட்ட தத்துவமும் கற்பித்தலில் அர்ப் பணிப்பும்.
3. ஆசிரியர் ஒழுக்க் கோவை பற்றிய முழு நிறை விளக்கமும், மாணவர்களுக்கு ஒரு நேர் எடுத்தக்காட்டாக அமையும் நடத்தைகளும்.
4. நடைமுறையிலிருக்கும் நடவடிக்கைகளை மதிப்பதற்கும் மாற்றங்களைச் சிபார்சு செய்வதற்குமான இயல்புகள்.
5. கலைத்திட்ட மதிப்பீடும் கணிப் பீடு கல்வியியல் ஆய்வுகளில் ஈடுபாடும்.
6. தனது தெரிவுகள் குறித்தும் ஏனையோரின் நடத்தைகள் குறித்தும் தொடராக மதிப்பீடு செய்யும் ஆற்றல்.
7. தொழில்சார் விருத்திக்கான சந்தர்ப்பங்களைத் தேடிக் கொண்டு சுயாதீனமாகக் கற்கும் ஆற்றல்கள். கல்வியின் அன்றாடப் போக்குகளைப் பின்பற்றும் ஆர்வமுள்ள மனப்பாங்குகளை புதிய ஆசிரியர்கள் கைக்கொள்ள வழிகாட்டுவதும் தேசிய கல்வியற் கல்லூரிகளின் இலக்குகளாகவுள்ளன.

இவற்றை அடைய ஆசிரிய மாணவர்களுக்கான உள்வாரி வெளிவாரிக் கணிப்பீடு ளும், பரீட்சைகளும் நடைமுறை யிலுள்ளன. கல்வியற் கல்லூரி களில் கற்கும் ஆசிரிய மாணவர்கள் அடைய வேண்டிய இலக்குகளை இனங்காண்ப தற்கும் சுய கணிப்பீட்டை தொடர் மதீப்பீட்டுக் கற்றல் கற்பித்தல் செயல் ஒழுங்கின் அத்தியாவசி யங்களைப் புரிந்து தனக்குத் தானேயும் சமூகத்திற்கும் வகை கூறக்கூடிய இயல்பைப் பெறவும் வழிகாட்டப்படுவர். ள

## ஆசிரிய சேவையின் பெருமையைப் பிரகாசிக்கச் செய்வதற்கான கற்றல் கலாச்சாரத்தை நோக்கி.

| சவால்தேவை | தற்போதைய நிலை | செய்யவேண்டியவை |
|---|---|---|
| கல்வியை சனறாயப் படுத்துதல். | எழுத்தறிவின்மை, செயற்பாட்டு எழுத் தறிவு குறைபாடு, பாடசாலையில் சித்தி பெறாதோர், பாடசா லையை விட்டுவிலகு வோர். | யாவருக்கும்கல்வி, அத்தியாவசிய கற் றல் மட்டத்தை அடைவதற்கு உத வுதல். |
| அறிவுப் பிரவாகம் | பல பாடங்களை மன னஞ் செய்தல், குறி ப்பு வழங்குதல், பாரம்பரிய மதிப்பீட்டு முறைகள். | கற்றலுக்காகக் கற் றலை மேம்படுத்து தல். உதவியுட னான சுய கற்றல். |
| விரைவாக மாற்றம டைந்துவரும் சமூகத் தின் தேவைகளுக்கு முகங்கொடுத்தல்.. | நெகிழ்ச்சியற்ற/பாடவி தானம்/பாடசாலைக் கட்டமைப்பு, கற்றல்/ கற்பித்தல் வகுப்பறை க்கு/பாடநூலுக்கு/ பாரீட்சைக்கு வரைய றுக்கப்படுதல். | பாடவிதான கட்ட மைப்பில் நெகிழ் தன் மையை ஏற்ப டுத்துதல், முறை சார்/ முறைசாரா/ முறைப்படியற்ற கல்வி சந்தர்ப்பங் களை ஒன்றிணைத் தல், கற்றற்றிறனை விருத்தி செய்தல். |
| உள்நாட்டுப் போக்கு கள்/தற்கால பிரச்சி னைகள், திறந்த பொரு ளாதாரத்தின் அவசியம். | பாரம்பரிய தொழில்க ளுக்காக மட்டும் கல்வி | புதிய தொழில்களுக் குத் தேவையான அறிவு, திறன்களை விருத்தி செய்தல், தனியார் துறையின் கோரலுக்கு அவசி யமான திறன்களை விருத்தி செய்தல். |

| சவால்/தேவை | தற்போதையநிலை | செய்யவேண்டியவை |
| --- | --- | --- |
| இனப்பிரச்சினை வேறு ..................? அறநெறி | பாடவிதானத்தின் நடு நிலைத்தன்மை (அல்லது கவனஞ் செலுத்தாமை) பாடசாலை பழக்க வழக்கங்களில் இருந்து முரன்பாடுகளுக்கு நிவாரணம் கிடைக்காமை. | பல்கலாசார புரிந்துணர்விற்காக பாடவிதானத்தை/பாடசாலைப் பழக்க வழக்கங்களைப் பயன்படுத்துதல். |
| தமது பிரதேசத்திற்குக் குறிப்பான பிரச்சனைகள் உதாரணம்:-<br>– வறுமையான சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள்.<br>– வளம் குறைந்த தன்மை.<br>– அகதிகள் பிரச்சினை.<br>– உல்லாசப்பயணக் கைத்தொழில், போதைப்பொருள் பாவனை பாலியல் குற்றங்கள். | இவ்வாறான நிலை கற்றலுக்குத் தடையாக இருக்கும் விதத்தை இனம்காணாமை. | விசேட தேவைகளை இனம் கண்டு அவசியமான பரிகாரம் வழங்குதல் |
| மேற்குறித்த பிரச்சினைளைத் தீர்ப்பதற்காக கற்றல் /கற்பித்தல் செயலலொழுங்கில் ஏற்பட வேண்டிய மாற்றங்களை இனங்காணல். | 'கற்பித்தல் கலாச்சாரம்'<br><br>பாரம்பரிய கற்பித்தல் கோலம். | கற்றல் கலாச்சாரத்தை உருவாக்குதல் விருத்தி செய்தல்.<br>-சுய கற்றல்<br>-குழு வேலை<br>-ஒப்படைகள்<br>-செயற்றிட்டங்கள்<br>-தொடர்ச்சியான மதிப்பீடு<br>-இடையிட்ட மதிப்பீடு<br>-செயற்பாட்டு ஆய்வுகள் |

# யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கல்வியியல் செயற்திட்டங்கள் நிறைவேற்றம்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் அணி ஆசிரிய மாணவர்கள் உள்ளகப் பயிற்சி பெறும் பாடசாலைகளில் கல்வியியற் செயற்பாட்டு ஆய்வுகளையும், செயற்திட்டங்களையும் இவ்வருடம் நிறைவேற்றினர். குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்பாடடையச் செய்ய, கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்கும் செயற்திட்டங் களாக இவை அமுலாக்கப்பட்டன.

இவ்வகையில் யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயத்தில் நூலகம் அமைக் கப்பட வேண்டிய தேவையைக் கருதி அப்பாடசாலையில் உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள யாழ் தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றினார் அதிபர் திரு.ந.சுப்பிரமணியம். அவர் தனது அலுவலகத்தையே நூலகமாக்கும் செயற்திட்டத்தை ஆசிரிய மாணவர்கள் மேற்கொள்ள ஒத்துழைத்தார். அதிபர், ஆசிரியர், சமூகத்தவர் உதவியுடன் ஆசிரிய மாணவர்கள் நூலகத்தை உருவாக்கினர். 13/07/2002 அன்று பிரதம விருந்தினராகச் சென்று யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் நூலகத்தைத் திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர், ஆசிரிய மாணவர்கள் நிற்பதையும் படம் சுட்டுகின்றது.

மேற்குறிப்பிட்டவாறு பாடசாலைகளின் பல்வேறு அவசிய தேவை களை நிறைவேற்றும் செயற்திட்டங்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரிய மாணவர்கள் நிறைவேற்றியுள்ளனர். பாடசாலைகள் தொடர்பான கல்வியியல் செயற்பாட்டாய்வுகள், செயற்திட்டங்கள் மாணவர்களின் கல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நடைமுறைப்படுத்த கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

# JANANI




## JANANI TRANSPORTERS

**KANDY - COLOMBO - JAFFNA**

**S.S.PATHMANATHAN**

**74$^{A}$ GALLE ROAD**
**DEHIWALA**
**T.P. : 01-761588-9**
**075 - 355618-9**
**070 - 212843**

Cover Printed By Unie Arts (Pvt)Ltd., Colombo-13.T.P.: 330195